egistered as a NewsPaper

விலை ரூபா-7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

இலவசப் பிரதி

ங்கங்கள்-12

தம் -15 | திருவள்ளுவர் ஆண்டு- 2035 | ஐப்பசி-16 | 01-11-2004 | திங்கட்கிழமை | ஓசை -257



உங்கள் அனைத்துத் தேவைகளுக்கும்

R.V.பந்தல் சேவை

முல்லைச்சாலை, தருமபுரம். T.P:0712-610008 (சி-10476) விநாயகர் வீதி, மயிலிட்டி.

- பள்ளிவாசல், மத்ரசாக்கள் தீவைப்பு -

# இரு முஸ்லிம் மதப்பிரிவினரிடையில் காத்தான் குடியில் மோதல்!

## பொலிசாரால் இரவுநேர ஊரடங்கு அமுல்

(மட்டக்களப்பு)

**மட்டக்களப்பு காத்தான்குடியில் இரு முஸ்லிம் மதப் பிரிவினரிடையே ஏற்பட்ட வன்முறை ாரணமாக பள்ளி வாசல் ஒன்றும் இரண்டு மத்ரசாக்களும் சேதமாக்கப்பட்டதோடு, சில டுகளும் உடைக்கப்பட்டன. அத்தோடு உந்துருளிகளும் அடித்து நொருக்கப்பட்டன. சிறுவன் நவன் உட்பட ஐவர் தாக்குதலில் காயமடைந்தனர்.**

இதனைத் தொடர்ந்து ஏற்பட்ட தட்ட நிலையைத் தணிக்க லதிக பொலிசார் வரவழைக் ப்பட்டதோடு, இரவு 7.00 மணி தல் காலை 6.30 மணிவரை ரடங்குச் சட்டத்தை பொலிசார் முல் செய்துள்ளனர்.

முஸ்லிம்களை பெரும்பான் மயாகக் கொண்ட இப் பிர தேசத்தில் இஸ்லாமிய மத கொள் கைகள் மற்றும் கோட்பாடுகள் தொடர்பான முரண்பாடுகளின் எதிரொலியாகவே இந்த வன் முறைகள் இடம்பெற்றுள்ளது. ஜாமியத்துல் உலமா சபையின் கோட்பாடுகளின் அடிப்படையில் மதத்தை பின்பற்றும் ஒருவர் மாற் றுப் பிரிவினரால் கடத்தப்பட்டதாக வெளியான வதந்தி காரணமா கவே நேற்று இந்த வன்முறைகள் இடம்பெற்றுள்ளதாகக் கூறப்படு கின்றது. நூற்றுக்கும் மேற்பட் டோர் தடிகள், பொல்லுகள் சகி தம் இந்த வன்முறையில் ஈடுபட் டுள்ளனா. மருதமுனை வாசியொரு வரால் நிர்மாணிக்கப்பட்டு வரும்

(12ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்ச்செல்வன் இன்று வன்னி திரும்புகிறார்

(கிளிநொச்சி)

ஐரோப்பிய நாடுகளுக்குப் பயணம் மேற்கொண்டிருந்த அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்கள் இன்று வன்னி திரும்பவுள்ளார்.

இன்று அதிகாலை கொழும்பு வந்தடையவுள்ள இவர் சிறிலங்கா விமானப் படை உலங்குவானூர்தி மூலம் கிளிநொச்சியை காலை 7.00 மணியளவில் வந்தடைவர் எனத் தெரியவருகிறது.

இவருடன் விடுதலைப்புலிகளின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவன், மற்றும் சமாதானச் செயலகத்தைச் சேர்ந்த செல்வி ஆகியோரும் வன்னி திரும்பவுள்ளனர். இவர்களுடன் ஐரோப்பிய நாடுகளுக்குப் பயணம் மேற்கொண்டிருந்த ஒரு பகுதியினர் ஏற்கனவே தாயகம் திரும்பியமை தெரிந்ததே.

## கூட்டுப்பொறுப்புடன் அமைச்சுக்கள் செயற்படாவிடில் நடவடிக்கை

### - சனாதிபதி சந்திரிக்கா எச்சரிக்கை

ஐக்கிய மக்கள் சுதந்திர முன் னி அரசின் அமைச்சரவையில் ங்கம் வகிக்கும் அமைச்சர்கள் ட்டுப் பொறுப்புடன் நடந்து ாள்ளாவிடின் அவர்களுக்கு ிராக உரிய நடவடிக்கை எடுக் படும் என சனாதிபதி எச்சரித் ள்ளார். இதேவேளை சிறீலங்கா ஸ்லிம் காங்கிரசின் அதிருப்தி ளர்கள் மூவருக்கும் பிரதி மைச்சுப் பொறுப்புக்கள் வழங் பட்டதனை அடுத்து புதிய சிக்கல்கள்

ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது. நேற்று வழங்கப்பட்ட புதிய அமைச்சுப் பொறுப்புக்க ளுடன் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசில் அமச்சர்களின் எண்ணிக்கை 80 ஆக உயர்ந்துள் ளது. முன்னய ஐக்கிய தேசிய முன்னணி அரசில் அமச்சர்களின் எண்ணிக்கை அதிகம் என ஜே.வி.பி யும் சனாதிபதி தலைமையிலான கட்சியினரும் கடும் விமர்சனங் களை வெளியிட்டு இருந்தனர் ஆனால தற்போது முன்னைய ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தை விடவும் தற்போது 12 அமைச்சர்கள் அதிகமாக நியமிக்கப்பட்டு உள் ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## மயிலிட்டிக்கடற்பரப்பில் மீனவர் மீது கடற்படை தாக்கு!

### -7 பேரில் மூவர் படுகாயம்-

(யாழ்ப்பாணம்)

யாழ்.மயிலிட்டிக் கடற்பரப்பில் வைத்து ஏழு கடற்றொழிலாளர்கள் நேற்று அதிகாலை சிறிலங்கா கடற்படையினரால் தாக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு தாக்குதலுக்கு இலக்கான ஏழு கடற்றொழிலாளர்களில் வல்வெட்டித்துறை ஆதிகோவிலடியைச் சேர்ந்த அ.அன்பழகன் (வயது27), பு.ஜெகதீஸ்வரன் (வயது30)செ.சுமன் (வயது 22) ஆகிய மூவரும்கடும் காயங்களுக்கு உள்ளாகியிருக்கின்றனர்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## சனாதிபதி குறித்த கருத்தை மாற்றிக்கொள்ளப் போவதில்லை

### விமல் வீரவன்ச தெரிவிப்பு

ி குறித்து தான் தெரிவித்த கருத்துக்கள் அவரை அவதூறு ம் வகையில் அமையவில்லையென ஜே.வி.பியின் பிரசார லாளர் விமல்வீரவன்ச தெரிவித்துள்ளார்.

அவ்வாறு அவதூறு செய்வதாக பிரதியமைச்சர்களின் சார்பில் ன் பெரேரா கருதினால் அதனை தான் எதுவும் செய்ய முடியா தெரிவித்த அவர் தனது கருத்தை நான் நிறுத்திக்கொள்ளப் வதில்லையென தெரிவித்துள்ளார்.

99 ஆம் ஆண்டு சனாதிபதி தேர்தலின் போது புலிகள் சனாதிப படுகொலை செய்திருந்தால் ரணில்

(12ஆம் பக்கம் பார்க்க)

## இவ்வாரத்தில் இந்தியா-சிறிலங்கா பாதுகாப்பு உடன்பாடு கைச்சாத்து

(கொழும்பு)

இலங்கைக்கும் இந்தியாவுக் கும் இடையிலான பாதுகாப்பு ஒப்பந்தம் இவ் வாரப் பகுதியில் கைச்சாத்திடப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. ஜனாதிபதி சந்திரிகா குமாரணதுங்க எதிர் வரும் 3 ஆம் திகதி இந்தியா வுக்கு உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொள்கிறார் இதன் போது இலங்கையின் சமாதான நகர்வு தொடர்பில் இந்தியாவின் புதிய அணுகுமுறை தொடர்பாக விரிவாக ஆராயப்படும் அதே நேரம், இலங்கைக்கும் இந்தியா வுக்கும் இடையிலான பாதுகாப்பு ஒப்பந்தமும் கைச்சாத்திடப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.இதே வேளை .இந்திய இராணுவத் தள பதி நாளைய தினம் இலங்கை வருகிறார் இவர் தமது விஜயத் தின் போது ஜனாதிபதி, பிரதமர். மற்றும் முப்படைகளினதும் தளப திகள் ஆகியோரை சந்தித்து இரண்டு நாடுகளுக்கு இடையிலான பாது காப்பு ஒப்பந்தம் குறித்து இறுதிக் கட்ட நடவடிக்கைகள் தொடர்பில் விவாதிப்பார் என தெரிவிக்கப்பட் டுள்ளது. (32)

### இணைப்பு



காந்தரூபன் அறிவுச்சோலை சிறுவர் இல் லத்தின் பதி னொராம் ஆண்டு நிறைவை முன் னிட்டு வர்ணப் பிரசுரம் இன் றைய ஈழநாதம் நாளிதழுடன் இணைக்கப்பட்டுள்ளது.

### இன்றும்,நாளையும் கண்காட்சி

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தின் 30 ஆவது ஆண்டு நிறைவையொட்டி நடாத் தப்பட்ட விஞ்ஞானக் கண்காட்சி மிண்டும் இன்றும் நாளையும் இடம பெறவுள்ளதாக விஞ்ஞான பீட மாணவர் ஒன்றியம் அறிவித்துள் ளது. (41)

## இந்திய இராணுவத்தளபதி இன்று கொழும்பு வருகிறார்

### - இராணுவ முகாம்களுக்கும் விஜயம்

(புதுடில்லி)



இந்திய இராணுவத்தளபதி லெப். ஜெனரல் என்.சி.விஜய் நான்கு நாள் விஜயமொன்றை மேற்கொண்டு இன்று கொழும்பு வருகிறார். இன்று கொழும்புக்கு வரும் இவர் அரசியல் தலைவர்களையும், படைத்தரப்பினரையும் சந்திக்கத்திட்டமிட்டுள்ளார்.

இந்தவிஜயத்தின் போது இந்தியத்தள பதிக்கு இராணுவ அணிவகுப்பு மரியாதையும்

(12ஆம் பக்கம் பார்க்க)

### -யாழ்.குடாநாட்டு மக்களின் அன்றாட பிரச்சினைகள்

## ஐரோ.ஒன்றியத்திற்கான அறிக்கைக்காக அதிகாரி ஒருவர் யாழ்ப்பாணம் பயணம்

குடாநாட்டு மக்களின் அன் றாடப் பிரச்சினைகள் மற்றும் மனி தாபிமானப் பிரச்சினைகள் தொடர் பான நகவல்களைச் சேகரித்து ஐரோப்பிய ஒன்றியத்துக்கு அறிக்கை சமர்ப்பிப்பதற்காக அதிகாரி ஒரு வர் யாழ்ப்பாணம் சென்றுள்ளார். பிரான்ஸில் செயற்படும் ஹரித் தாஸ் அமைப்பின் ஆசிய மற்றும் மத்[illegible] கிழக்கு நாடுக[illegible] கான பிரிவின் தலைவர் [illegible] பா[illegible]பஸ் ஜோன் என்ற அதி[illegible]ம் முரண்[illegible]று யாழ்ப்பாணம் [illegible]டியுள்ளார்[illegible]. நேற்றுக்காலை [illegible]லை மல்வத்த இவர் யாழ். மாவட்ட அரசசார் பற்ற நிறுவனங்களின் இணையப் பிரதிநிதிகளைச் சந்தித்துக் குடா நாட்டு நிலைமைகள் தொடர்பாகக் கேட்டறிந்தார். உயர்பாதுகாப்பு வலயத்தால் மக்கள் எதிர் நோக்

(12ஆம் பக்கம் பார்க்க)

# பயிர்ச்செய்கைக்கு அனுமதிப்புதான வாக்குறுதியை படையினர் மீறிவிட்டனர்

## அரியாலைப்பகுதி விவசாயிகள்

யாழ்.அரியாலைப்பகுதியில் உள்ள விளை நிலங்களில் பெரும் போகப்பயிற் செய்கையை மேற்கொள்வதற்கான அனுமதியை வழங்குவதாக கூறி சிறிலங்கா படையினர் தம்மை ஏமாற்றி விட்டதாக அப்பகுதி மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர் . இராணுவ அதிஉயர் பாதுகாப்பு வலயங்களுள் காணப்படும் மேற்படி பகுதி நிலப்பரப்புகளில் இவ்வாண்டுமுதல் பெரும்போகப்யிற்செய்கைகளை மேற்கொள்ள அனுமதிவழங்கப்படும் என யாழ். அரசாங்க அதிபர் செ.பத்மநாதனூடாக படைத்தரப் பினர் அறிவித்திருந்தனர்.

படையினரது இவ் அறிவிப்புகளிற்கு அமை வாக இப்பகுதிகளில் பயிற்செய்கைகளை மேற் கொள்ள அப்பகுதி விவசாயிகள் நடவடிக்கைகளை எடுத்துள்ளபோதும்இறுதியில் படையினர் அதற்கு அனுமதி மறுத்திருக்கின்றனர்.

இதனால் இப்பகுதி விவசாயிகளுக்கென உலக உணவுஸ்தாபனத்தினால் வழங்கப்பட்ட உதவிகளும் இடை நிறுத்தப்பட்டிருப்பதாக சுட்டிக்காட்டும் அரியாலை விவசாயிகள் சம்மேளனம் தமது கண்ட னத்தை தெரிவித்து அறிக்கை ஒன்றையும் வெளி யிட்டுள்ளது.

# முள்ளியவளை-முறிப்பு அ.த.க பாடசாலை கூரை வேயப்படாததால் மாணவர் அவதி

(முள்ளியவளை)

முள்ளியவளை பிரதேச முறிப்புக் கிராம அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை மாணவர்கள் மழை ஒழுக்கினால் நெருக் கடியை எதிர்நோக்கி வரு கின்றனர்.

மேற்படி பாடசாலை கூரை மேச்சல் போகம் தவறிய நிலை யில் பாரிய ஓட்டையாக வுள்ளதால் மழை நேரங்களில் மாணவர்கள்,அதிபர், ஆசிரியர் கள் மற்றும் தளபாடங்களும் ஒழுக்கினால் நனைந்து கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் பெரும் அவலம் ஏற்பட்டு வருவ தாகவும் இதனால் மழை நேரங் களில் மாணவர்களை பாடசா லைக்கு அனுப்பமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் பெற் றோர்கள் தெரிவிக்கின்றனர். மேற்படி பாடசாலையின் அவல நிலையை சம்பந்தப்பட்ட அதி காரிகள் துறை சார்ந்தோர் நிவர்த்தி செய்ய உடனடி நடவடிக்கை எடுத்து மாணவர்களின் கற்றல் செயற்பாட்டுக்கு உதவ வேண்டும் என அப்பகுதி ஊரக தேசிய எழுச்சிப் பேரவை செயலாளர் சீத்தாராம் கேட்டுள்ளார் (ஆ)

# புளியம் பொக்கணையில் மன நோயாளி தற்கொலை

(அலுவ்லக செய்தியாளர்)

மனநோயாளியான இளைஞர் ஒருவர் தனக்குத் தானே கழுத் தில் சுருக்கிட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

மேற்படி சம்பவம் நேற்றுக் காலை 9.00 மணியளவில் கண்டா வளை புளியம் பொக்கணைப் பகுதியில் இடம் பெற்றுள்ளது.

மேற்படி சம்பவம் குறித்து வட்டக்கச்சி காவல் பணிமனை யினர் விசாரணைகளை மேற்கொண டதுடன் கிளிநொச்சி மாவட்ட வைத்திய சாலையில் வைத்திய கலாநி யூடி ரமேஸ் குமார் சட லத்தை மருத்துவ பரிசோதனையை மேற்கொண்டு மூச்சுத் திணறியதால் ஏற்பட்ட மரணமென தெரிவித்ததைத தொடர்ந்து திடீர் மரண விசா ரணை அதிகாரி டாக்டர் கே.வி.கே திருலோக மூர்த்தி தற்கொலையென தீர்ப்பு வழங்கினாா.

இரத்தினசிங்கம், தர்மசீலன் (வயது24) என்ற மன நோயாளியே தற்கொலை செய்து கொண்டவ ராவர்.

இவர் ஏற்கனவே தற் கொலை முயற்சியிலீடுபட்டு காப் பாற்றப் பட்டவர் என்பது குறிப் பிடத்தக்கது. (சோ)

# வீதியை மேவிப்பாயும் நீரால் வீதிசேதமடைய வாய்ப்புண்டு

(அலுவலகசெய்தியாளர்)

கிளிநொச்சி கனகபுரம் 8 ஆம் பண்ணையின் வீதியோர நீர்செல்லும் வாய்க்காலின் மத்தியில் மணல் மற்றும் கற்கள் பறிக்கப்பட்டுள்ளமையின் காரணமாக நீர்செல்ல முடியாது தடைப்பட்டு வீதியை குறுக்கறுத்து பாயும் நிலை ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக வீதியினை குறுக்கறுத்து கழிவு நீர்பாய்வதன்



காரணமாக மேற்படி கிரவல் வீதிவிரைவில் சீர்கெடக் கூடிய சூழ்நிலை தோன்றியுள்ளது. (சோ)

# கோப்பாய் துயிலும்இல்லத்தில் மேஜர் திருமாறனின் நினைவுக்கல்

(யாழ்ப்பாணம்)

திருகோணமலை கடற்பரப்பில் இடம் பெற்ற நேரடி மோதலில் வீரச்சாவடைந்த மேஜர் ஜீவா அல்லது திருமாறன் என அழைக்கப்படும் குருநகர் யாழ்ப்பாணத்தை சேர்ந்த கி.கிலமென்ற் இன் நினைவுக்கல் நேற்று யாழ் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

முன்னதாக குருநகரில் உள்ள அவரது இல்லத்தில் இடம் பெற்ற அஞ்சலி நிகழ்வுகளை தொடர்ந்து அவரின் திருவுருவப்படம் கோப் பாய் மாவீரர் துயிலும் இல்லத் திற்கு எடுத்துவரப்பட்டு அங்கு இடம் பெற்ற அஞ்சலி நிகழ்வு களைத் தொடர்ந்து அவரது நினைவுக்கல் திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டது.

இதில் போராளிகள் பொதுமக் கள் எனப் பலரும் கலந்து கொண் டனர். (33)

# உடைந்துள்ள நீர்ப்போக்கியை திருத்த மக்கள் கோரிக்கை

(அலுவலகசெய்தியாளர்)

ஜெயந்திநகர் திருநகர் செல்லும் முக்கிய சந்தியில் உள்ள நீர்ப்போக்கி உடைந்த நிலையில் பல வருட காலமாக சீர் செய்யப் படாத நிலையில் உள்ளது.



உருத்திபுரம் 8 ஆம் வாய்க்கால் ஜெயந்திநகர் செல்வாநகர் பகுதி மக்கள் மற்றும் கிளி. இந்துக்கல்லூரி மாணவர்கள் யாவரும் இவ் வீதியூடாகவே தினம் பயணி[illegible]து வரும் வேளையில் இவ்வீதியிலுள்ள உடைந்த நீர்ப்போக்[illegible] பானது பாதசாரிகளுக்குப் பெரும் இன்னல்களை ஏற்படுத்தக் கூடிய வகையில் உள்ளமையானது கிராம மக்களுக்குப் பெரும் கவலையினை தோற்றுவித்துள்ளது.

இரவு வேளைகளில் பயணிப்பவர்கள் பலர் மேற்படி நீர்ப்போக்கி யில் விழுந்து காயங்களுக்குள்ளான சம்பவங்கள் பல இடம்பெற்றுள்ள போதிலும் பல வருட காலமாக மேற்படி நீர்போக்கியினை சீர் செய்வதற்கு சம்பந்தப்பட்ட திணைக்களத்தின[illegible] இதுவரை நடவடிக்கை யினை மேற்கொள்ளாததையிட்டு மக்கள் [illegible] தெரிவித்துள்ளதுடன் மேற்படி நீர்ப்போக்கியினை உடன் திரு[illegible]து மக்கள் போக்கு வரத்திற்கேற்பட்டுள்ள சிரமத்தினை [illegible]தற்கு சம்பந்தப் பட்டவர்கள் முன்வரவேண்டுமென கே[illegible]ன்றனர். (சோ)

திரிகை கி[illegible]

# நிவாரண விநியோகம் சீரில்லை வலி.வடக்கு மீனவர் அதிருப்தி!

## யாழ்.அரச அதிபருக்குக் கடிதம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வலிகாமம் வடக்குப் பிரதேச மீனவர்கள் தமக்கான உலருணவு நிவாரண விநியோகம் சீரற்றதாகக் காணப்படுவதாக அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

கடந்த கால இராணுவ ஆக் கிரமிப்புக்கள் மற்றும் இடப் பெயர்வுகள் என்பவற்றால் பாதிக் கப்பட்டுள்ள வலிகாமம் வடக்கு மீனவர்களுக்கென அரசினால் வழங்கப்பட்டு வரும் உலருணவு நிவாரண விநியோகம் தடைப்பட் டுள்ளது.

இதனால் தாம் பாதிக்கப்பட்டி ருப்பதாகச் சுட்டிக்காட்டும் அப் பகுதி மீனவர்கள் தமக்கான உல ருணவு நிவாரணத்தை தொடர்ச் சியாக வழங்க நடவடிக்கை எடுக்குமாறும் கோரியுள்ளனர்.

இது குறித்து தமது விசனத்தையும் அதிருப்தியையும் வெளிப்படுத்தி அப்பகுதி மீன வர்கள் யாழ். அரச அதிபர் செ.பத்மநாதனுக்கு பாதிக்கப்பட்ட மீனவர்கள் கடிதம் ஒன்றையும் அனுப்பி வைத்துள்ளனர். (33)

### துணுக்காய்-தென்னியங்குளத்தில் பொதுநோக்கு மண்டபம் திறப்பு

துணுக்காய் பிரதேசத்தின் தென்னியங்குளம் கிராமத்தில் கேயார் நிறுவனத்தின் ஐந்தரை இலட்சம் ரூபாய் நிதியுதவிடன் தமிழர்புனர் வாழ்வுக்கழக அனுசரணையுடன் பாண்டியன் குளம் துணுக்காய் தமிழர் புனர்வழ்வு கழகத்தினால் நிர்மானிக்கப்பட்ட பொது நோக்கு மண்டபத்திறப்பு விழா நிகழ்வு கடந்த வியாழக்கிழமை தென்னியங் குளம் கிராமிய அபிவிருத்தி சங்க தலைவர் சு.பாலசிங்கம் தலைமை யில் இடம் பெற்றது. நிகழ்வில் தொடர்ந்து பொது நோக்கு மண்ட பத்தின் பெயர்ப்பலகையினை கேயார் திட்ட இணைப்பாளர் சந்திரமோகன் திரைநீக்கம் செய்து வைத்தார்.

நிர்மணிக்கப்பட்ட கட்டடத் தினை துணுக்காய் உதவி அரசங்க அதிபர் நா.நந்தகுமார் சம்பிரதாய பூர்வமாக நாடாவினை வெட்டித் திறந்து வைத்தார். இதனைத் தொடர்ந்து [illegible] கருத்துரைகள் இடம் பெற்றன. (24)


# சாவு அறிவித்தல்

## இராமலிங்கம்-சரஸ்வதி

புதுக்குளம் கனகராயன்குளம் வவுனி யாவை வசிப்பிடமாகக்கொண்ட இராமலிங்கம் சரஸ்வதி நேற்று 31.10.2004ஆம் திகதி காலமாகிவிட்டார். இவர் காலம்சென்ற இராமலிங்கத்தின் அன்பு மனைவியும், சண்முகநாதன், தனபாலசிங்கம், கருணாநிதி (அவுஸ்திரேலியா), பாலசிங்கம், பரமேஸ்வரன் (ஈசன்கடை), சுப்புலட்சுமி, விக்னேஸ்வரி, ஆகியோரின் தாயாரும், துரைசிங்கம், அம்பலவானர், புவனேஸ்வரி, கிருஸ்ணவேணி, ஜெயா (அவுஸ்திரேலியா) மகாராணி, கஸ்தூரி ஆகியோரின் மாமியுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியை 01.11.2004 இன்று மாலை 2.00 மணிக்கு கனகராயன் குளம் இந்து மயானத்தில் நடைபெறும் என் பதை உற்றார், உறவினர்களுக்கு அறியத்தரு கின்றோம்.

தகவல்:
ஈசன் (மகன்)

(5235)

# அவுஸ்.இடமிருந்து பாதுகாப்பு ஒப்பந்தத்தையல்ல

# பாதுகாப்பு நடவடிக்கைகளையே வரவேற்கிறோம்

-இந்தோனேசியாவின் புதிய சனாதிபதி தெரிவிப்பு

(பாக்தாத்)

**பாதுகாப்பு சம்பந்தமாக இந்தோனேசியாவிற்கு தேவைப்படுவதெல்லாம் பாதுகாப்பு நடவடிக்கைகளே அல்லாமல் பாதுகாப்பு ஒப்பந்தங்கள் அல்ல என்று இந்தோனேசியாவின் புதிய சனாதிபதி யுதொயோனோ தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பாக நேற்றுக் காலை அவுஸ்திரேலியத் தொலைக்காட்சிக்கு அவர் அளித்த பேட்டியில் மேலும் தெரிவித்துள்ளதாவது.

அவுஸ்திரேலியாவுடனான பாதுகாப்பு நடவடிக்கைகள் வரவேற்கப்படும் அதே சமயத்தில் இதற்கான ஒப்பந்தங்கள் எதுவும் செய்து கொள்ளப்படமாட்டாது.

இந்தோனேசிய வெளிவிவகார அமைச்சர் கஷனுடன் அவுஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர் கடந்த வாரம் நடாத்திய பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து அவுஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர் கருத்து வெளியிடும் போது இரு நாடுகளுக்குமிடையில் விரிவான பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவது ஆக்க பூர்வமானதாக இருக்குமென்று தெரிவித்திருந்தார். இதற்கு இந்தோனேசியா சனாதிபதி பதிலளிக்கும் போது அவுஸ்திரேலிய அரசாங்கத்திடமிருந்து பாதுகாப்பு விவகாரம் தொடர்பாக எந்தவித பிரேரணையும் இது வரையிலும் தான் பெற்றுக் கொள்ளவில்லையென்றும் குறிப்பிட்டுள்ளதுடன் ஆசியான் அமைப்புக்கு உட்பட்ட வகையிலேயே இரு நாடுகளுக்குமிடையே பாதுகாப்பு நடவடிக்கைகளை பலப்படுத்துவது உக்கிரமாகுமென்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.


இரு நாடுகளும் 1995 ஆம் ஆண்டு பாதுகாப்பு ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திட்டிருந்தன. அதில் இரண்டு நாடுகளுக்குமிடையிலான ஒத்துழைப்பை பலப்படுத்த வேண்டுமென்றும் எந்தவொரு நாட்டிற்கும் அச்சுறுத்தல் ஏற்பட்டாலும் மற்ற நாடு உச்ச கட்ட உதவியை வழங்கவேண்டும் என்றும் அவ் ஒப்பந்தத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது

## இறுதிநேர பிரசாரம்!

(வோஷிங்டன்)

ஓசாமா பின்லேடனை ஒழிப்பது தொடர்பான விடயத்தை மையமாக வைத்து அமெரிக்காவில் இறுதிநேர சனாதிபதித் தேர்தல் பிரசாரங்கள் இடம் பெற்றுவருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# அபிப்பிராய வாக்கெடுப்பில் ஜோன்ஹெரி முன்னிலையில்




(வோஷிங்டன்)

அமெரிக்க சனாதிபதி தேர்தலுக்கான நாள் நெருங்கியுள்ள நிலையில் தேசிய மட்டத்தில் நடத்தப்பட்ட அபிப்பிராய வாக்கெடுப்பில் சனநாயகக் கட்சி வேட்பாளர் ஜோன்ஹெரி முன்னிலையில் திகழ்கின்றார்.

ஆறு முக்கிய மாநிலங்களில் ஹெறி புஷ்சை விட ஒருபடி முன்னிலையில் உள்ளார். ஏனைய இடங்களில் இரு வேட்பாளர்களும் சமமான நிலையில் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# நாட்டின் இறைமைக்குச் சவால் விடுக்கப்பட்டால் பொறுமையைக் கடைப்பிடிக்க மாட்டோம்

–அவுஸ்.இன் நெடுந்தூர ஏவுகணை செய்தியையடுத்து மலேஷியா எச்சரிக்கை

(கோலாலம்பூர்)

எமது நாட்டின் இறைமைக்கு சவால் விடுக்கப்பட்டால் பொறுமையைக் கடைப்பிடிக்கப் போவதில்லையென்று மலேஷியா எச்சரிக்கை விடுத்துள்ளது. இது பற்றித் தெரியவருகையில் ;

ஆசியாவின் எந்தப் பகுதிக்கும் நெடுந்தூர ஏவுகணைகளை செலுத்தக்கூடிய ஆற்றல் அவுஸ்திரேலியப் போர் விமானங்களுக்கு இருப்பதாக வெளியான செய்தியையடுத்து மலேஷியா இந்த எச்சரிக்கையினை விடுத்துள்ளது.

2012 ஆம் ஆண்டில் செலுத்துவதற்கு ஏதுவாக நெடுந்தூர ஏவுகணையை போர் விமானத்தில் தயார் நிலையில் வைப்பதற்கு அவுஸ்திரேலியா திட்டமிட்டுள்ளது.

இது தொடர்பான செய்திவெளியானதையடுத்து ஆசிய நாடுகளின் இறைமையை அவுஸ்திரேலியா மதிக்கும் என்று நம்புவதாக மலேஷியப் பாதுகாப்புஅமைச்சர் நஜீம் ரசாக் தெரிவித்துள்ளார்.

இதே வேளை மலேஷியா தனது சொந்த நலன்களையிட்டு எச்சரிக்கையாக இருக்குமென்றும் பயங்கரவாதத்திற்கெதிராகவும் தொடர்ந்து போராடுமென்றும் மலேஷியப் பாதுகாப்பமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

# துருக்கிய பவுசர் சாரதி ஈராக்கில் சுட்டுக்கொலை

(பாக்தாத்)

துருக்கிய பவுசர் ஒன்றை வீதியில் மறித்த ஈராக் தீவிரவாதிகள் அதை ஓட்டிவந்தவரை அந்த இடத்திலேயே சுட்டுக்கொன்றனர். ஈராக் தலைநகர் பாக்தாத்திற்கு தெற்கே 250 கி.மீற்றர் தொலைவில் நேற்று இச்சம்பவம் இடம் பெற்றது.

# சிலவாரங்களில் 167 தீவிரவாதிகள் கைது ஈராக் இடைக்கால அரசின் பிரதமர் தெரிவிப்பு

(பாக்தாத்)

ஈராக்கில் கடந்த சில வாரங்களில் சந்தேகத்தின் பேரில் 167 இஸ்லாமியத் தீவிரவாதிகளை அதிகாரிகள் கைதுசெய்துள்ளதாக அந்நாட்டின் இடைக்கால நிர்வாக பிரதமர் சியாத் அல்லாவி தெரிவித்துள்ளார்.

கைது செய்யப்பட்டவர்களில் 04 உயர்மட்ட உறுப்பினர்கள் அடங்குகின்றனர். கைதுசெய்யப்பட்ட 167 பேரில் 11 பேர் ஈராக்கியர்கள் எனவும், இவர்கள் ஆப்கானிஸ்தானில் சண்டையில் ஈடுபட்டவர்களென அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அத்துடன் அதிகமான தீவிரவாதிகள் தமது கட்டுப்பாட்டிலுள்ள பலூஜா நகரில் மறைந்துள்ளார்களென தெரிவிக்கப்படுகிறது. இந்நகரை கிளர்ச்சிவாதிகளின் பிடியிலிருந்து விடுவிப்பதே தமது நோக்கமென அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# இரத்த புற்றுநோய் இல்லை அரபாத்தின் வைத்தியர் தெரிவிப்பு

(பரீஸ்)

பலஸ்தீன சனாதிபதி யசீர் அரபாத்திற்கு நடத்தப்பட்ட மருத்துவ பரிசோதனைகளில் அவரிற்கு இரத்தப் புற்றுநோய் இல்லையென்பது அறிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்து கிருமித் தொற்று நோய்கள் எதுவும் ஏற்பட்டுள்ளனவா? என்பதை கண்டறிய மருத்துவ பரிசோதனைகள் இடம் பெற்றுவருகின்றன. மேற்குக் கரையிலுள்ள றம்ழான் நகரிலிருந்து அவர் பிரான்ஸ் இற்கு மருத்துவ சோதனைக்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளமை தெரிந்ததே.

ஆரம்பத்தில் இரத்தப் புற்றுநோய் ஏற்பட்டிருக்கலாமென சந்தேகிக்கப்பட்டது. தற்போது சோதனைகளில் அவரிற்கு இரத்த புற்றுநோய் இல்லை என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் அரபாத்தின் உடல்நிலை குறித்து இறுதி மருத்துவ அறிக்கை புதன்கிழமை வெளியிடப்படுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. அதுவரை அவரைப் பார்வையிட செல்பவர்களின் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# 2000 முதல் 5000 தீவிரவாதிகளே ஈராக்கில் உள்ளனரென்கிறது அமெ.

(பாக்தாத்)

சதாம் ஹுசைனின் ஆதரவாளர் உள்ளிட்ட தீவிரவாதிகள் இரண்டாயிரம் முதல் ஐயாயிரம் வரையானவர்களே தற்போது ஈராக்கில் அமெரிக்கப்படையினருக்கெதிரான தாக்குதலை நடத்திவருவதாக அமெரிக்கப் படையினர் தெரிவித்துள்ளனர்.

ஈராக் தலைநகர் பாக்தாத், பலூஜா, ஜமாலி நகரிலுமே அமெரிக்கப்படையினருக்கெதிரான தாக்குதல்கள் அதிகம் இடம் பெற்றுவருவதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை இறுதியாக இடம்பெற்ற தீவிரவாதிகளுக்கும் அமெரிக்கப்படையினருக்குமிடையிலான மோதலில் எட்டு ஈராக்கியர் உயிரிழந்துள்ளனர். இதேவேளை அமெரிக்கப்படையினர் மீதான குண்டுத் தாக்குதலில் மூன்று அமெரிக்கக் கடற்படையினர் காயமடைந்துள்ளனா.

# ஆப்கானில் கடத்தப்பட்ட ஐ.நா.ஊழியர் அல்–ஜசீரா தொலைக்காட்சியில்

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் தலைநகர் காபூலில் தீவிரவாதிகளால் கடந்த வியாழக்கிழமை கடத்திச் செல்லப்பட்ட ஐக்கிய நாடுகள் சபையின் ஊழியர்களின் காட்சிகள் அடங்கிய ஒளிநாடாக்களை அல் ஜசீரா தொலைக்காட்சி நேற்று ஒளி பரப்பியுள்ளது.

பிரிட்டிஷ் அயர்லாந்து நாடுகளின் இரட்டைக் குடியுரிமை பெற்ற ஒருவர் மற்றும் பிலிப்பைன்ஸ் நாட்டுப் பிரஜைகளைக்கொண்ட இந்த ஐக்கிய நாடுகள் சபை ஊழியர்கள் இந்த ஒளிநாடாக்களில் எந்தக் காயமுமின்றிக் காணப்பட்டனர்.

இந்த ஒளிநாடா இஸ்லாமிய இராணுவம் என்ற தீவிரவாதக்குழுவால் பதிவு செய்யப்பட்டதாகக் கூறப்படுகிறது. அமெரிக்கக் கூட்டுப் படையினரால் கைது செய்யப்பட்ட ஆப்கானிஸ்தான் கைதிகள் விடுதலை செய்யப்பட்டு, அங்குள்ள வெளிநாட்டுப் படைகள் வெளியேறாவிட்டால் பணயக்கைதிகளை கொலை செய்யப்போவதாக தீவரவாதிகள் மிரட்டியுள்ளனர்.

இந்தக் கடத்தலுக்கு ஆப்கான் படையினரும் உதவியிருக்கலாம் என்பதற்கான சாத்தியக்கூறுகளை தன்னால் மறுக்க முடியவில்லை ஆப்கானிஸ்தானின் பாதுகாப்பு அமைச்சின் குரல் தரவல்ல அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

# பொதுக்குழு ஒன்றை அமைக்க சர்.ம.உரிமைக்குழு கோரிக்கை

(புதுடில்லி)

முன்னாள் இந்தியப்பிரதமர் இந்திராகாந்தி கொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து சீக்கிய இனத்தவர்களுக்கு எதிராக நடத்தப்பட்ட வன்முறைகளுக்குப் பொறுப்பானவர்களைத் தண்டிப்பதற்கு பொதுக்குழு ஒன்றை நியமிக்க வேண்டும் என்று சர்வதேச மனித உரிமைகள் குழு ஒன்று இந்திய அரசை கேட்டுள்ளது.

1984 ஆம் ஆண்டு சீக்கிய இனத்தைச் சேர்ந்த மெய்காப்பாளர் ஒருவரால் இந்திராகாந்தி சுட்டுக் கொல்லப்பட்டது குறிப்பிடத்தக்கது

# வவுனியா நகரின் கழிவுப் பொருட்களை அகற்றும் பணிகள் மீண்டும் பாதிப்பு

## -மக்களை ஒத்துழைக்க வேண்டுகை

(செட்டிகுளம்)

**வவுனியா நகரின் கழிவுப் பொருட்களை அகற்றுவதில் மீண்டும் பிரச்சினை ஏற்பட்டு இருப்பதாகவும் இதன் காரணமாக நான்கு நாட்களுக்கு மேலாகக் கழிவுப் பொருட்கள் அகற்றப்படாமையால் தொடர்ந்தும் கழிவுப் பொருட்கள் தேங்கி இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.**


இது தொடர்பாக வவுனியா நகரசபை செயலாளர் மு.செ. சரவணபவவிடம் கேட்டபோது நகரில் கழிவுகள் அகற்றப்படவில்லை என்றால் அனைத்துத் தரப்பினரும் தம்மீது பழி சுமத்துவதிலேயே குறியாக இருப்பதாகவும், பிரச்சினையினை அறிந்து செயற்படுவதற்கு யாரும் முன்வருவதில்லை என்றும் தெரிவித்தார். தற்போது கழிவுப் பொருட்களைக் கொட்டுவதற்கு தெரிவு செய்யப்பட்டுள்ள பம்பைமடு பிரதேசமானது மக்கள் நடமாட்டம் இல்லாத காட்டுப் பகுதி என்றும் காடுகளை அழித்து பாதைகள் அமைத்தும், கிடங்குகள் வெட்டியும் குப்பைகள் கொட்டப்படுவதாகவும், இதற்கு என்று இதுவரை சுமார் மூன்று லட்சம் வரை செலவு செய்யப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

ஆண்டு ஒன்றுக்கு நகரசபையின் வருமானத்தில் சுமார் அரைவாசி இந்தக் கழிவு அகற்றுவதற்கு மட்டும் செலவிடப்படுவதாகவும் தெரிவித்தார். சிலர் மக்களுக்கு பிழையான தகவல்களை கொடுப்பதன் மூலமாக மக்களைத் தூண்டிவிடுவதாகவும் தெரிவித்தார். நகர்ப் புறத்தில் உள்ள மக்கள் தம்மால் அகற்றப்படும் கழிவுப் பொருட்களை உரிய முறையில் அகற்றாமலும், பிரித்துப் போடாமலும் விடுவதன் காரணமாகவே அதிகளவான குப்பை சேர்வதுடன் பிரச்சினை ஏற்படுவதாகவும், தெரிவித்தார். மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து நடவடிக்கை எடுக்காத பட்சத்தில் இந்தப் பிரச்சினை தொடர்ந்து இடம் பெற்றுக்கொண்டுதான் இருக்கும் என்றும் தெரிவித்தார். பம்பமடுப் பிரதேசத்தில் குப்பை கொட்டப்படும் இடத்தில் இருந்து இரண்டு கிலோ மீற்றருக்கப்பாலேயே மக்கள் குடியிருப்பு இருப்பது குறிப்பிடத்தக்கது. (21)

# போசாக்கின் முக்கியத்துவம் பற்றி சாந்தபுரத்தில் பயிற்சி வகுப்பு

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனமும் உணவு விவசாய நிறுவனமும் இணைந்து நடாத்தும் போசாக்கின் முக்கியத்துவம் பற்றிய பயிற்சி வகுப்பு நேற்று முன்தினமும் நேற்றும் சாந்தபுரம் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது.



தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் கிளிநகர் பிரதேச இணைப்பாளர் சி.சிவனேசன் தலைமையில் ஆரம்பமான இந்நிகழ்வில் சர்வதேச சுகாதார. போசாக்கு ஆலோசகர் கலாநிதி லலிதா பட்டார்சார்ஜி, செல்வி.இதயரஞ்சினி மத்தியாஸ் ஆகியோர் விரிவுரையாற்றினர்.மற்றும் உணவு விவசாய பிரதிநிதி மா.செல்வராசா, சி.தேவராசா கமக்கார அமைப்புப் பிரதிநிதிகள் பொதுமக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். அத்துடன் உள்ளூர் உற்பத்திப் பொருட்களைக் கொண்டு சிக்கன முறையில் சத்துணவினை தயாரித்து வழங்கியமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# நெற் செய்கை பாதிப்பு

(வட்டக்கச்சி)

பத்து வீட்டுத் திட்ட கறுப்பிகுளம் கடும் மழை காரணமாக நீர் நிறைந்து வான் பாய்ந்து வருகின்றது. இக்குளத்திலிருந்து நீர் பாய்வதனால் 70 ஏக்கர் பகுதி காலபோக நெற் செய்கையினை மேற்கொள்ள முடியாமல் சிறுபோக சூடுகளை அடிக்க முடியாத நிலையில் விவசாயிகள் கடும் சிரமத்தை எதிர் நோக்கி வருகின்றனர். மற்றும் கறுப்பிகுளம் இவ்வாண்டு புனரமைக்கப்பட்டு அதிக அளவு நீர் தேங்கி இருப்பதனால் சிவிக்சென்ரர் 9ஆம் வாய்க்கால்,ஆறுமுகம் வீதி உட்பக்க வயல்களும் அதிக அளவு நீர் மூடி நிற்பதனால் விவசாயிகள் கடும் சிரமத்தை எதிர் நோக்கி வருகினறமை குறிப்பிடத்தக்கது. (12)

# மாவீரர் நாள் நிகழ்வுகள் குறித்து முள்ளியவளையில் கலந்துரையாடல்

முள்ளியவளைப் பிரதேசத்தில் மாவீரர் நாள் நிகழ்வு குறித்து முன்னோடி ஆலோசனைக் கலந்துரையாடல் சிறப்புற இடம்பெற்றது .

முள்ளியவளை பிரதேசத்திற்குட்பட்ட அரச,அரசசார் பற்ற நிறுவனங்கள் ஆலயபரிபாலன சபையினர் மாதர் சங்கத்தினர் மற்றும் பொது அமைப்பு சார்ந்தோர் கலந்து கொண்ட மாவீரர் நாள் நிகழ்வு குறித்து நடைபெற்ற ஆலோசனைக் கலந்துரையாடல் 27/10/2004 அன்று முள்ளியவளை மாவீரர் மண்டபத்தில் முள்ளியவளை மாவீரர் துயிலும் இல்ல அபிவிருத்தி செயற்றிட்டக்குழுத் தலைவர் க.ஜெகதீஸ்வரன் தலைமையில் மு.ப. 10.00மணிக்கு நடைபெற்றது.

மாவீரர் நாள் நிகழ்வு குறித்து ஆலோசனைக் கருத்துரையினை முள்ளியவளை, புதுக்குடியிருப்பு கோட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் இ.பிறையாளன், முள்ளியவளைப் பிரதேச காவல்துறைப் பொறுப்பாளர் கணேசமூர்த்தி, முள்ளியவளை கோட்ட தேசிய எழுச்சிப் பேரவை செயலாளர் கி.தியாகராசா கரைதுறைப்பற்று உதவி அரசாங்க அதிபர் பணிமனை பிரதமலிகிதர் அ.அன்ரனி, முள்ளியவளைப் பிரதேச அரசியல்துறை பொறுப்பாளர் இ.நாகமைந்தன், முள்ளியவளைப் பிரதேச மாவீரர் துயிலும் இல்லப் பொறுப்பாளர் பொழிலன் ஆகியோர் நிகழ்த்திய தையடுத்து ஒன்றிணைந்த அனை வரும் கலந்து ஆலோசனை வழங்கி தீர்மானங்கள் எடுக்கப்பட்டதையடுத்து நிகழ்வு நிறைவானது. (ஆ)

## உலகதரிசன நிறுவனத்தால்

# இத்தாவிலில் 57 குடும்பங்களுக்கு தென்னை,விதை தானியம் வழங்கல்

(வடமராட்சி கிழக்கு)

உலகஉணவுத் தரிசன நிறுவனம் பச்சிலைப்பள்ளி பிரதேச தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் அனுசரணையுடன் இத்தாவில் கிராமத்தில் உள்ள 57 குடும்பங்களுக்கு பழமரக்கன்று, தென்னை நாற்று,தானிய விதைகளையும் வழங்கியுள்ளது. இதில் ஒவ்வொரு குடும்பத்துக்கும் 4 தென்னை நாற்றுக்கள், மாங்கன்று 01, தோடை 01 அத்துடன் விதை தானியமான பயறு, சோளம், கௌப்பி போன்றவற்றை வழங்கியதாகப் பச்சிலைப்பள்ளி பிரதேச பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் தெரிவிக்கின்றனர். (11)

# முல்லைத்தீவு-புளியங்குளம் பிரதான வீதியில் சேதமடைந்த பாலத்தால் ஆபத்து!

(அலுவலக செய்தியாளர்)

முல்லைத்தீவு-புளியங்குளம் பிரதான வீதியில் நெடுங்கேணி ஊடாகச் செல்லும் வீதியில் உள்ள



சன்னாசி பரந்தன் இரும்பு பாலத்திற்கு மிகவும் அண்மையில் உள்ள பாலமொன்று பலத்த சேதமடைந்து காணப்படுகிறது.

இவ்வீதியூடாக பயணித்த தனியார் பேருந்து ஒன்று கடந்த 26ஆம் திகதி பாலத்திற்குள் குடைசாய்ந்ததில் தெய்வாதீனமாக மக்கள் எவரும் காயமடையவில்லை சாரதி சிறுகாயங்களுக்கு உட்பட்டார்.

நீண்டகாலமாக இப் பிரதான வீதியானது புனரமைப்பு இன்றி காணப்படுகின்றது. புளியங்குளச் சந்தியில் இருந்து சன்னாசி பரந்தன் பாலம் வரைக்கும் திருத்தப்பட்டுள்ள பாதை பாலத்திலிருந்து ஒட்டுசுட்டான் பகுதி வரைக்கும் திருத்தபடவில்லை. அத்தோடு பாலங்களும் பழுதடைந்த நிலையில் காணப்படுகின்றது.

எனவே இப்பிரதான வீதியைத் திருத்தித்தரும்படி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். அத்தோடு நெடுங்கேணிப் பிரதேசச் செயலாளா இதில் கூடிய கவனம் செலுத்தி புனரமைப்பு மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பதாகவும் இது பற்றி உடனடியாக மாவட்ட அரசாங்க அதிபருக்குத் தெரியப்படுத்தி இருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார். (கு,தீ)

# இடம்பெயர்ந்தோர் முகாமின் கூரை இடிந்து விழுந்தது

## திருமலையில் மூவர் காயம்

(திருமலை)

திருகோணமலை- உப்புவெளி, வல்லேன் பகுதியில் இடம் பெயர்ந்த முஸ்லிம் குடும்பங்கள் தங்கியிருக்கும் இரண்டு முகாம்களில் ஒன்றின் கூரை முகடு இடிந்து விழுந்தது. கடந்த வியாழக்கிழமை நண்பகலுக்குப்பின்னர் இடம் பெற்ற இந்த அசம்பாவிதத்தில் மூவர் காயமடைந்தனர். தெய்வாதீனமாக உயிர்ச்சேதம் ஏற்படவில்லை. காயமடைந்தோர் திருமலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். ஒருவர் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டார். காயமடைந்தவர்களில் இருவர் பெண்கள் ஆவர். (25)

# பிரதேச செயலர் பதவியேற்பு

(அலுவலக செய்தியாளர்)

வவுனியா வடக்கு நெடுங்கேணிப் பிரதேசச் செயலராக க.பத்மநாதன்



கடந்த 01.09.2004 முதல் தனது பதவியினை பொறுப்பேற்றுள்ளார். முன்னாள் பிரதேச்செயலாளர் ஓய்வு பெற்றுச் சென்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (கு.தீ)

# மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையை மீளக் கட்டியெழுப்பத் துரித நடவடிக்கை

(செட்டிகுளம்)

வவுனியா மாவட்டத்தின் தேசிய எழுச்சிப் பேரவையினை மீளக் கட்டியெழுப்பும் நடவடிக்கையில் வவுனியா மாவட்ட அரசியல் துறையினர் நடவடிக்கை எடுத்து வருகின்றார்கள்.

இதன் ஒரு கட்டமாக நேற்று முன்தினம் வவுனியா மாவட்டத்தின் அனைத்து தேசிய எழுச்சிப் பேரவையின் முக்கிய உறுப்பினர்களுடன் வவுனியா மாவட்ட அரசியல் துறையினரும், தமிழீழ தேசிய எழுச்சிப் பேரவையின் பொறுப்பாளர் சஞ்சேயனும் சந்தித்து கலந்துரையாடினார்கள். இதன் போது தேசிய எழுச்சிப் பேரவை எதிர் நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகவும், தீர்வுகள் தொடர்பாகவும் ஆராய்ப்பட்டதுடன், மாவீரர் நாள் நிகழ்வுகளை பிரதேசரீதியில் எவ்வாறு கொண்டாடுவது தொடர்பாகவும் ஆராயப்பட்டுள்ளது. வவுனியா தேசிய எழுச்சிப் பேரவையின் செயலாளர் நாதன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் வவுனியா மாவட்ட அரசியல் துறை பொறுப்பாளர் தி. ஞானவேல மற்றும் பலரும் கலந்து கொண்டனா. (21)

## சுயதொழில் கடனுதவி

கிளிநொச்சி மாவட்ட பெண்கள் அபிவிருத்திப் புனர்வாழ்வு நிறு வனத்தின் யு.என். டி.பி நிறுவனத் தின் உதவியுடன் 29.10.2004 ஆம் திகதி சுய தொழில் முயற்சிக்கான கடனுதவியாக அக்கராயன், கிளிநொச்சி பகுதிகளில் 15 பயனாளிகளுக்கு 200,000 ரூபா நிதி வழங்கப்பட்டுள்ளது.

## கடந்த வாரத்தில் 21.10.2004–27.10.2004

**21.**
*காஸாப்பகுதியில் இஸ்ரேலிய விமான மொன்று நடத்திய ஏவுகணைத்தாக்குதலில் ஹமாஸ் அமைப்பின் மூத்த தளபதி கௌவ்ல் கொல்லப்பட்டுள்ளார்.


கௌவ்ல் பயணித்த வாகனம்

*கோஸ்ரோறிக்கா நாட்டின் முன்னாள் சனாதிபதி "ரபீல்ஏஞ்சல் கால்டிறோன்" பதவிக்காலத்தில் செய்த ஊழல் மோசடிக்காக கைது செய்யப்பட்டு 9மாதசிறைத் தண்டனைக்கு ஆளாகியுள்ளார்.

**22.**
* ஈராககிய நகரான பலூஜாவில் அமெரிக்க இராணுவத்தினரது வான் தாக்குதலில் 5ஈராக்கியர்கள் உயிரிழந்துள்ளனர்.


சிதைவடைந்த கட்டடம்

**23.**
*ஈராக்கின் பாக்தாத் நகரில் இருந்து 18கிலோமீற்றர் தொலைவிலுள்ள பொலிஸ் சோதனைச் சாவடி அருகில் கார்க்குண்டு வெடித்ததில் ஈராக் பொலிசார் 10பேர் பலி, 5பேர் காயம்.

*சீனாவின் தலைநகர் பீஜிங் நகரிலுள்ள ஒரு ஆரம்பப் பள்ளியில் 5வயதுடைய மாணவனும். ஒரு ஆசிரியரும் கொலை செய்யப்பட்டனர்.

* ஆப்கான் தலைநகர் காபூலிலுள்ள பிரபலமான சந்தைத் தொகுதி அமைந்த மாவட்டமொன்றில் இடம் பெற்ற தற்கொலைத்தாக்குதலில் 6பேர் காயம்.

**24.**
*அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் கொலின்பவல் கிழக்காசிய நாடுகளுக்கு 4நாள் விஜயம்.


ஜப்பானில் கொலின்பவல்

*பலூஜா நகர் மீது அமெரிக்க விமானங்கள் குண்டுத்தாக்குதலை நடத்தியதில் 2பேர் பலி, 3பேர் காயம்.


சிதைவுகளுக்கிடையே.......

*யப்பானின் வடமேற்குப் பகுதியிலும் யமகோஷி மற்றும் ஒலியாவில் ஏற்பட்ட பூகம்பத்தினால் 23பேர் பலியானதுடன் 1400 பேர் வரை காயமடைந்தனர்.


பூகம்பப் பாதிப்பு

*ஈராக்கின் தலைநகர் பாக்தாத் விமான நிலையத்திற்கு சமீபமாகவுள்ள அமெரிக்கத் தளமொன்றில் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் அமெரிக்க இராஜதந்திரி ஒருவர் பலி.

*டுனிசியாவில் நடைபெற்ற சனாதிபதித் தேர்தலில் சனாதிபதியின் அல-அபிடீன்பேன்அலி 94 சதவீதமான வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றுள்ளார்.

*காஸாவின் தென்பகுதியிலுள்ள கான்யுனிஸ் அகதி முகாம் பகுதியில் இஸ்ரேல் படையினர் நடத்திய தாக்குதலில் 14பேர் பலி,33பேர் காயம்.

*ஈராக்கிய இராணுவத்தில் இணைந்த ஆயுதமற்ற 49 ஈராக்கியர்களை அல்-ஹைடாவுக்கு நெருக்கமான அலகுஸாப் அல்-ஸர்காவியின் போராளிக்குழு கொலை செய்தது.

*மியான் மாரின் இராணுவ ஆட்சியாளர் ஜெனரல்தான்ஷவே இந்தியாவிற்கு விஜயம்.

**25**
* தாய்லாந்தில் இஸ்லாமிய இளைஞர் நடத்திய அமைதிப்போராட்டத்தின் போது பொலிசாரினால் கைது செய்யப்பட்டு வாகனமொன்றில் அழைத்துச்செல்லப்பட்ட 80பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

* ஈராக்கில் இடம்பெற்ற தாக்குதல் மற்றும் குண்டு வெடிப்புக்களில் 12 ஈராக்கியர்கள் பலியானதுடன் வெளிநாட்டுப் படையினர் 2பேர் பலி.

**26.**
* இராமேஸ்வர மீனவர்கள் கடந்த 21 நாட்களாக மேற்கொண்ட வேலைநிறுத்தப் போராட்டம் கைவிடப்பட்டது.

* அவுஸ்திரேலியப் பிரதமர் ஜோன்ஹவாட் 4ஆவது ஆண்டு பதவிக்காலத்திற்காகப் பதவிப்பிரமாணம் செய்துள்ளார்.

* யூதக் குடியேற்றங்களை விலக்கிக் கொள்ளும் இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷரோனின் யோசனைக்கு இஸ்ரேலிய பாராளுமன்றம் அங்கீகாரம் வழங்கி யுள்ளது.


உறுப்பினர்களுடன் ஷரோன்

**27**
* இந்தியா பிருத்வி-3 என்ற நடுத்தர ஏவு கணையினை வெற்றிகரமான முறையில் பரீட்சித்துள்ளது.

# உரிமைகளை வென்றெடுக்க ஆசிரியர் சங்கம் இதய சுத்தியுடன் செயற்பட வேண்டும்

### –திருமலை நகர அரசியல்துறைப் பொறுப்பாளர்

(திருகோணமலை)

"பல்வேறு இடர்பாடுகளின் மத்தியில் பணியாற்றுகின்ற ஆசிரியர்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்கு ஆசிரியர் சங்கங்கள் இதயசுத்தியுடன் செயற்பட வேண்டும்." இவ்வாறு விடுதலைப் புலிகளின் திருகோணமலை நகர அரசியல்துறைப் பொறுப்பாளர் சிவகுமார். கடந்த புதன்கிழமை திருகோணமலை சென்யோசப் கல்லூரி மண்டபத்தில் வடகிழக்கு மாகாண பொது ஆசிரியர் சங்கம் நடாத்திய கலந்துரையாடலில் பங்குபற்றிப் பேசிய போது தெரிவித்தார்.

சங்கத்தின் தலைவர் ஆர்.ஜெறோம் தலைமை வகித்தார். ஆசிரியர்களின் இடர்பாடுகள் என்ற பொருளில் கலந்துரையாடல் நடத்தப்பட்டது.

மாகாண மேலதிகக் கல்விப் பணிப்பாளர் ரீ.பொன்னம்பலம் பேசும் போது "ஆசிரியர்களின் தேவைகள் பல நிறைவேற்றப் படாமல் இருப்பது வேதனை தருகிறது தேவைகள் படிப்படியாக நிறைவேற்றப்படும். ஆசிரியர்கள் பொறுமையோடு மாணவர்களின் கல்வியில் அக்கறை செலுத்தி சேவை புரிய வேணடும்" என்று கூறினார்.

தமிழீழ மாணவர் பேரவையின் திருமலை மாவட்டப் பொறுப்பாளர் புரட்சி பேசுகையில் மூவின ஆசிரியர்கள் அங்கம் வகிக்கும் இச்சங்கத்தினால் சமாதான நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தயாராக இருக்கும் என்றும் குறிப்பிட்டார்.

சங்கத்தலைவர் ஜெறோம் தனது தலைமையுரையில் ஆசிரியர்களுக்கான இடமாற்றம், கடன் பெறல், பதவி உயர்வு, சம்பள நிலுவை போன்ற விடயங்களில் ஆசிரியர்கள் எதிர்நோக்கும் இடர்பாடுகள் பற்றி எடுத்துக் கூறினார். தொண்டர் ஆசிரியர்கள், பகுதி நேர ஆங்கில ஆசிரியர்கள் தமது நிரந்தர நியமனம் தொடர்பாக கோரிக்கை விடுத்தனர்.

தலைவர் பதிலளிக்கையில் மாகாண செயலாளர் மற்றும் கல்விக்கழகப் பொறுப்பாளர் ஆகியோரிடம் இப் பிரச்சினை சமர்ப்பிக்கப்படும் என்று தெரிவித்தார். ஆசிரியர்கள், தொணடர் ஆசிரியர்கள், பகுதி நேர ஆசிரியர்கள் என்று நூற்றுக்கு மேற்பட்டோர் கலந்துரையாடலில் பங்குபற்றினர். (25)

# காரைநகர்–கல்வந்தாழ்வு முன்பள்ளி மூடப்பட்டதால் சிறார்கள் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். காரைநகர் கல்வந்தாழ்வு முன்பள்ளி கடந்த சில மாதங்களாக மூடப்பட்டுள்ளதனால் அம்முன்பள்ளியில் பயின்று வந்த சுமார் 50 வரையிலான சிறார்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இம்முன்பள்ளியில் பயிற்றுவிக்கும் ஆசிரியர்களுக்கு உரிய வேதனம் வழங்கப்படாததினாலும் இம் முன்பள்ளியில் நிலவிவரும் வளப்பற்றாக்குறைகள் காரணமாகவுமே இம் முன்பள்ளி மூடப்பட்டிருக்கிறது.

இதன் காரணமாக இங்குபயின்று வந்த சுமார் 50 வரையிலான சிறார்கள் முன்பள்ளிகளுக்குச் சென்று தமது கற்றல் செயற்பாடுகளைத் தொடரமுடியாத நிலை காணப்படுவதாகவும் இதனால் இம் மாணவர்களின் கல்வி எதிர்காலம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் சுட்டிக் காட்டப்படுகிறது. (33)

# யாழ்.இல் 75 பாடசாலைகளில் குடிநீர் வசதியை ஏற்படுத்தத் திட்டம்

### -யுனிசெப் 10 மில்.ரூபா நிதி ஒதுக்கியது

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் சீரான குடிநீர் வசதிகள் இல்லாத நிலையில் இயங்கிவரும் 75 பாடசாலைகளுக்கு குடிநீர் வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு ஐக்கிய நாடுகள் சிறுவர் பாதுகாப்பு நிதியம் (UNICEF) நடவடிக்கை எடுத்திருக்கிறது.

யாழ்.குடாநாட்டில் உள்ள அதிகளவான பாடசாலைகளில் பயின்று வரும் மாணவர்கள் சுத்தமான குடிநீரைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலையில் உள்ளனர். இதனால் இவ்வாறான பாடசாலைகளில் பயின்றுவரும் மாணவர்கள் அதிகளவில் தொற்றுநோய்களின் தாக்கங்களுக்கு இலக்காகும் நிலை காணப்படுகிறது.

இந் நிலைமையைக் கவனத்தில் கொண்டே யாழ்.குடாநாட்டில் உள்ள 5 கல்வி வலயங்களைச் சேர்ந்த பாடசாலைகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 75 பாடசாலைகளுக்கு குடிநீர் வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க ஐக்கிய நாடுகளின் சிறுவர் பாதுகாப்பு நிதியம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்காக இவ் அமைப்பினால் 10 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்நிதி மூலம் கிணறுகளை அமைத்தலும், நீர்த்தாங்கிகள், குழாய் இணைப்புகள் அமைத்தல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். (33)

# ஆளணிப்பற்றாக்குறையால் யாழ்.இல் நூலகங்கள் சீராக இயங்கமுடியாத நிலை

(யாழ்ப்பாணம்)

உள்ளூராட்சி திணைக்களங்களின் கீழ் யாழ்.குடா நாட்டில் இயங்கி வரும் நூலகங்களினைச் சீரான முறையில் இயங்கச் செய்வதற்கு ஆளணிப்பற்றாக் குறை பெரும் பிரச்சினையாக இருந்து வருவதாகத் தெரிவிக்கப் படுகின்றது.

அந்த வகையில் உள்ளூராட்சித் திணைக்களங்களின் கீழ் யாழ்.குடாநாட்டில் இயங்கி வரும் 30இற்கும் மேற்பட்ட நூலகங்களில் நூலகப்பதவி வெற்றிடங்கள் காணப்படுகின்றன. நீண்டகாலமாக வெற்றிடமாகவுள்ள இப்பதவிகள் நிரப்பப்படாமை நூலகச் செயற்பாடுகளைப் பெரிதும் பாதித்திருக்கின்றன. அத்துடன் இவ்வாறான நூலகங்களில் எழுதுநர்கள், சிற்றூழியர்கள், தொழில்நுட்பவியலாளர்கள் போன்ற பதவிகளும் வெற்றிடமாகவே காணப்படுகின்றன.

இதனால் பொதுமக்கள் நூலகங்களினது பயனை முழுமையாகப் பெற்றுக் கொள்ளமுடியாத நிலை காணப்படுகிறது. (33)

# 120 வீடுகள் கையளிப்பு

(நல்லூர்)

குருநகர் பகுதியில் "நிகொட்" அனுசரணையுடன் கியூடெக் நிறுவனத்தால் அமைக்கப்பட்ட 120 வீடுகள் பொது மக்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன. கியூடெக் நிறுவன இயக்குனர் அருட்தந்தை ஜெயக்குமார் தலைமையில் இந்நிகழ்வு இடம் பெற்றது. (41)

# யாழ்–காரைநகர் பேருந்துசேவை சீரில்லையென மக்கள் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் காரைநகர் ஆகிய பகுதிகளுக்கிடையே இடம்பெற்று வரும் பேருந்துச் சேவை சீரான முறையில் இடம்பெறுவதில்லை என மக்கள் விசனம் தெரிவித்து வருகின்றனர். மேற்படி சேவையில் ஒருசில பேருந்துகளே ஈடுபட்டு வருகின்ற போதும் அவற்றின் சேவை நேரம் சீரற்று இருப்பதால் பயணிகள் தமது பயணங்களைக் குறித்த நேரத்தில் மேற்கொள்ள முடியாத சூழ்நிலை காணப்படுகின்றது. (33)

தமிழீழதேசத்தின் மீது சிங்களப் பேரினவாதிகள் நிகழ்த்தி வந்த இன ஒடுக்குமுறைப் போரினால் தமது உறவுகளை இழந்து ஆதரவுக்கு யாருமின்றித் தவிக்கும் இளம்பிஞ்சுகளுக்கு ஆதரவுக்கரம் கொடுக்க வேண்டும். அவர்களை தமிழீழத்தின் எதிர்காலச் சிப்பிகளாக, புத்திஜீவிகளாக வளர்த்தெடுக்க வேண்டும் என்ற தனது எண்ணத்தை தலைவரிடம் எடுத்துக் கூறிவிட்டு கடலிலே காவியமாகிப் போன கடற்கரும்புலி மேஜர் காந்தரூபனின் கனவு, தமிழீழத் தேசியத்தலைவரின் திட்டமிடலில், செயல் வடிவம் பெற்றுப் பதினொரு ஆண்டுகளை வெற்றிகரமாகக் கடந்து பெருவிருட்சமாக உயர்ந்து வளர்ந்து வருகிறது.

சோலை நிர்வாகி செ.புவியரசன் அவர்கள் அங்கு வந்து உரையாடலைத் தொடந்தார். அவருடன் அறிவுச்சோலை வளாகத்தைப் பார்ப்பதற்காக வரவேற்பறையில் இருந்து வெளியே வந்தோம்.... அந்த இடமே சோலையாகக் காணப்பட்டது.

அப்படியே பிள்ளைகளின் விடுதிகளைப் பார்வையிட்டுக் கொண்டு வந்தோம். வித்தியாசமான இரண்டு விடுதிகள் இருந்தன. அதில் கலகலப்பு ஒலி கேட்டுக்கொண்டிருந்தது. நாங்கள் அந்த விடுதிக்குள் சென்றோம். மிகவும் சிறிய பிள்ளைகள் தான் அதனுள் இருந்தார்கள். எங்களைக் கண்டவுடனேயே வீட்டின் வாசலுக்கு ஓடிவந்து எங்களின் கைகளைப் பிடித்து "மாமா

அறிவுச்சோலையின் அமைப்பு மிகவும் அற்புதமாக இருந்தது. அந்தப் பிள்ளைகள் நற்பழக்கம் கொண்டவர்களாகவும், ஒருவரை ஒருவர் அரவணைத்துச் செல்கின்ற, பலராலும் மதிக்கத்தக்க பண்புகளைக் கொண்டவர்களாகவும் வளர்ந்து வருகின்றார்கள். காந்தரூபன் அறிவுச்சோலைக்குள் சென்றால் தன்னை மறந்து அன்புக்குக் கட்டுப்பட்டு ஒரு பண்பு மிக்க மனிதனாக மாற்றம் காணமுடியும். காந்தரூபன் அறிவுச்சோலையின் மரங்கள் அனைத்துமே அற்புதமான வாசகங்களைப் பேசிக்கொண்டிருக்கின்றன. என்றால் அங்கு வளரும் பிஞ்சுகள்... எப்படி... எந்தப்பக்கம் திரும்பிப் பார்த்தாலும் மரங்களில் மனித மனங்களைப் பண்படுத்தும் அற்புதமான வாசகங்கள் எழுதப்பட்டிருந்தன இத்தனைக்கும் மேலாக காந்தரூபன் அறிவுச்சோலை ஒரு அழகிய கிராமம் போலக் காட்சி தருகிறது. அந்தளவுக்குக் கிராமத்தில் இருக்கக் கூடிய அத்தனை வசதிகளும் அறிவுச்சோலை வளா



அவர்களுக்குச் சுமையாக இருக்க வேண்டுமே தவிர ஏனைய விடயங்களை அவர்கள் இழக்கக் கூடாது என்ற சிந்தனை ஓட்டத்தின் அடிப்படையில்தான் காந்தரூபனின் வேண்டுதலுக்கமைவாக இவர்களை அரவணைத்து தமிழீழத்தில் நல்ல பிரஜைகளாக உருவாக்கும் நோக்கில் தமிழீழத்தேசியத் தலைவர் வே.பிரபாகரன் அவர்களால் 1993 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் முதலாம் திகதி காந்தரூபன் அறிவுச்சோலை கோப்பாயில் திறந்து வைக்கப்பட்டது,

உலகிலே யுத்தம் நடந்து கொண்டிருக்கின்ற நாடுகளில் பெற்றோரை இழந்த சிறுவர், சிறுமியர் ஆதரவற்றவர்களாகத் தேங்குகின்ற நிலைதான் அதிகமாக உள்ளது. ஆனால் தமிழீழத்தில் எங்கள் தலைவர் அவர்கள். போர் நடந்து கொண்டிருந்த சமகாலத்தில் ஆதரவற்ற, சிறுவர்களை அரவணைத்து சமூகப்பாதுகாப்பைச் செய்திருக்கிறார். இது மிக முக்கியமான விடயம். இந்தச் சிறுவர்களைப் போர் முடிந்ததன் பின்னர் அரவணைப்பதைவிட போர் நடந்து கொண்டிருக்கின்ற சமநேரத்தில் அவர்களுக்கு ஆதரவுக்கரம் கொடுப்பதன் மூலம் போர் நிறைவடைய குழந்தைகள் ஒரு மறுவாழ்வான நிலைக்குள் வந்துவிடுவார்கள். இது இந்தச் சிறுவர்களின் வாழ்விலும் மாற்

இப்போது வெளிப்பட்டு எம்முடன் இணைகிறார்கள். யுத்தகாலத்துடன் ஒப்பிடும் போது இப்போது இணைகின்ற பிள்ளைகளின் வீதம குறைவாகத்தான் இருக்கிறது.

***. உங்கள் இல்லத்தில் பிள்ளைகளுக்கு தொழில்ரீதியாக எத்தகைய பயிற்சிகளை வழங்கி வருகிறீர்கள்.?**

இவர்களுக்கு இசைக்கலை, விளையாட்டு, யோகாசனம், கராட்டி, குத்துச்சண்டை போன்ற பயிற்சிகளையும் கற்பித்தலையும் வழங்கியிருக்கிறோம். 18 வயதின் பின்னர் அவர்கள் மேற்படிப்பைத் தொடர முடியாதுபோன சந்தர்ப்பங்களில் இலத்திரனியல், ஓட்டுனர் பயிற்சி அவர்களின் விருப்பத்திற்கு ஏற்ற தொழிற் பயிற்சிகளையும் வழங்கி வருகிறோம் என்றார்.

***. காந்தரூபன் அறிவுச்சோலையின் செயற்பாடுகளில் யுத்தம் எத்தகைய நெருக்கடிகளை ஏற்படுத்தியது? என்று கேட்டபோது,**

யுத்தகாலம் என்பது உண்மையில் பெரும் நெருக்கடி மிகுந்த காலமாகஇருந்தது. இந்தக் காலத்தில் யுத்த அச்சுறுத்தல் அற்ற பகுதிகளில் தான் பிள்ளைகளை வைத்திருக்க வேண்டும். அப்படியான சூழலில்தான் பிள்ளைகளை வளர்க்கமுடியும் என்று தேசியத்தலைவர் அடிக்கடி

# உறவில்லை என்றிருந்த எமக்கு இன்று பல இலட்சம் உறவுகள்

இந்த வகையில் காந்தரூபன் அறிவுச்சோலையின் தோற்றம், வளர்ச்சி உள்ளிட்ட பல்வேறு விடயங்களை அறியும் முகமாக நாங்கள் காந்தரூபன் அறிவுச்சோலைகுச் செல்கின்றோம். அங்கு சென்றதும் எம்மை முதலில் வரவேற்றது "நல்லவற்றையே எண்ணப் பழகிக் கொள்" என்ற வாசகம். அதனை வாசித்தபடி உள்ளே நகர்ந்து கொண்டிருந்த போது இரண்டாவது வாசகம் எம் சிந்தனை ஓட்டத்தைத் திருப்பியது. அது மிகவும் அற்புதமான வாசகம் "அன்பின் பரம்பலை உன்னில் இருந்தே தொடங்கு" என்றிருந்தது. நாம் இந்த இரண்டாவது வாசகத்தையும் வாசித்துக் கொண்டு

வாங்கோ'' ''கதிரையில் இருங்கோ" என்று உள்ளே அழைத்துச் சென்றார்கள். நாம் கதிரையில் இருந்ததும் சின்னஞ்சிறுவர்கள் அனைவரும் சுற்றி வளைத்துக் கொண்டு "நொடிசொல்லுங்கோ மாமா" என்றும், "கதை சொல்லுங்கோ மாமா" என்றும் தமது தேடலை வெளிப்படுத்தினார்கள். நாங்கள் இப்படி எதிர் பார்க்கவில்லை. அவர்கள் எங்களுக்கு நொடி சொன்னார்கள், பாடல் பாடி மகிழ்வித்தார்கள். நாங்களும் அந்தப் பிஞ்சு மழலைகளை கதை சொல்லி மகிழ்விப்போம் என்று ஒரு கதையைச் சொல்ல அந்தப் பிஞ்சு மழலைகள் கூறினார்கள்.

## காந்தரூபன் அறிவுச்சோலை ஆரம்பிக்கப்பட்டு இன்றுடன் 11 ஆவது ஆண்டை நிறைவு செய்கிறது

அருகில் இருந்த வரவேற்பறையில் அமர்ந்து; அந்த இரண்டு வாசகங்களைப் பற்றியும் சிந்தித்துக் கொண்டிருந்தோம்.

அப்போது நேரம் 6.20 மணி இருக்கும். மழை மெதுவாகத் தூறல்களைச் சொரிந்து கொண்டிருந்தது, திடீரென்று "வணக்கம் மாமா" எனப்பல பிஞ்சுக் குரல்கள் வணக்கம் கூறின. திரும்பிப் பார்த்தோம். அனைவரும் மழைக்கவசம் அணிந்தவாறு கைகளில் புத்தகங்களுடன் அணியாக வந்துகொண்டிருந்தனர். அவர்களுக்கு நாமும் பதிலுக்கு வணக்கம் கூறினோம். அனைவரது முகங்களிலும் மகிழ்ச்சியின் ரேகைகள் பரவியிருந்தன. இவர்கள் எம்மைக் கடந்த சற்று நேரத்தில் காந்தரூபன் அறிவுச்

"உந்தக்கதை வேண்டாம் மாமா வேறுகதை சொல்லுங்கோ அதுதான் வேணும்'' என்றார்கள். இப்போது என்ன செய்வது. பெரும் சங்கடத்தில் மாட்டிவிட்டோம். ஒன்றும் செய்ய முடியாதநிலை. மனமின்றி வெளியே வந்தோம். அவர்கள் எங்களை வாசல் வரை கொண்டு வந்து வழி அனுப்பி வைத்தார்கள். இவ்வாறு பிள்ளைகளின் மருத்துவமனை உள்ளிட்ட அனைத்து இடங்களையும் பார்வையிட்டு ஒருவாறு காந்தரூபன் அறிவுச்சோலையின் நீண்ட பரப்பைச் சுற்றிப்பார்த்தோம்.

உண்மையில் காந்தரூபன்

கத்திற்குள் அடங்கியிருக்கின்றன.

இந்த நிலையில் அறிவுச் சோலையின் நிர்வாகச் செயற்பாடுகள் பற்றி அறிந்து கொள்ளும் நோக்கில் செ.புவியரசன் அவர்களுடன் கலந்துரையாடினோம்.

**காந்தரூபன் அறிவுச்சோலை உருவாக்கப்பட்டதற்கான காரணம் என்னவாக இருந்தது எனக் கேட்டேன்.?**

காந்தரூபன் அறிவுச்சோலை ஆரம்பிக்கப்பட்டதன் பிரதான நோக்கம். எங்கள் போராட்ட காலத்தில் பொதுமக்களின் அழிவுகள்,



நிர்வாகி செ.புவியரசன்

பிரிவுகள் என்பது நிச்சயமாக நிகழும். இவ்வாறு வந்தேறி முடியும் சமூகப் பிரிவுகள் காரணமாக நிறையப்பேர் ஆதரவற்றவர்களாக வேண்டிய நிலை உருவாகும். இந்த நிலையில் "தாய், தந்தையர்களை இழந்த சிறார்கள் ஆதரவின்றி நாட்டுக்குள் அலைந்து திரியக்கூடாது. தாய், தந்தையர்களை இழந்தது மாத்திரம் தான்

றத்தை ஏற்படுத்தும் அதேவேளை நாட்டிலும் ஒரு சீரான வாழ்க்கை நிலை தொடர்ந்து பேணப்படும். இத்தகைய நோக்கங்களின் அடிப்படையில் தான் தலைவர் அவர்கள் இச்சோலையை உருவாக்கினார் என்றார் அவர்.

எங்களுக்கு வலியுறுத்தி வருவார்.

இந்தநிலையில் நாங்கள் தொடர் இடப்பெயர்வால் பெரும் பொருளாதாரப் பிரச்சினைகள், அடிப்படை வசதிப் பிரச்சினைகள் என்பவற்றிற்கு முகம் கொடுக்க வேண்டியிருந்தது. யுத்த



***. யுத்தம் ஓய்ந்திருக்கிறது. சமாதானச் சூழல் உருவாகி ஒரு அமைதியான நிலை யில் நாடு இருக்கிறது. இந்த நிலையில் ஆதரவிழந்து உங்களுடன் இணைபவர்களின் தொகையில் ஏதாவது மாற்றம் இருக்கிறதா? எனக்கேட்டதற்கு**

1993 ஆம் ஆண்டு 50 பிள்ளைகளுடன் காந்தரூபன் அறிவுச்சோலை ஆரம்பிக்கப்பட்டது. இப்போது 226 பிள்ளைகள் இருக்கிறார்கள். யுத்தத்தால் நேரடிப் பாதிப்புக்குள்ளான பிள்ளைகள் அறிவுச்சோலையுடன் இணைகின்ற தொகை அதிகரித்திருந்தது. தற்போதைய சமாதானத்தில் யுத்தத்தின் மறைமுகப்பாதிப்புக்களினால் பாதிக்கப்பட்ட பிள்ளைகள்

காலத்தில் பிள்ளைகளின்வரவு அதிகமாக இருந்தது. இவர்களைப் பராமரிப்பது எமக்கு கடினமாக இருந்தது. இந்த நிலையில் எமக்கு தலைவரின் ஒத்துழைப்பும், விடுதலைப்புலிகள் இயக்கத்தின் நேரடி ஒத்துழைப்பும் இருந்தது. இதன் காரணத்தால் அனைத்து வசதிகளும் எங்களுக்குக் கிடைத்தது. இதனால் பிள்ளைகளின் பராமரிப்பில் ஏற்பட்ட நெருக்கடி நிலையை இலகுவாகக் கையாண்டு தீர்க்க முடிந்தது.

***.காந்தரூபன் அறிவுச்சோலையின் நிர்வாகம் பற்றிக் கூறுங்கள் எனக் கேட்டதற்கு?**

காந்தரூபன் அறிவுச்சோலை சிறுவர் இல்லத்தின் நிர்வாகம் ஒரு சபை அமைப்பாக அமைக்கப்பட்டிருக்கிறது,

இந்தச் சபையினுடைய தலைவர் பிரான்சிஸ் ஜோசப் அடிகள் இதன் செயலாளர் கதிரவேல் ஐயா உட்பட சபையில் ஏழுபேர் அங்கத் தவர்களாக இருக்கிறார்கள். இந்தச்சபை கூடுகின்ற வேளையில் 51 பேர் அங்கம் பெறுவார்கள். 51 பேரின் அங்கீகாரத்தின் ஊடாக சபையினுடைய பார்வை முழுமையாகக் கிடைக்கும். சபை மூலமாக அறிவுச் சோலை சிறுவர் இல்லம் அரசாங்கத்தில் பதிவு செய்த சிறுவர் இல்லமாக 2001 ஆம் ஆண்டிலிருந்து இயங்கி வருகிறது. இது எமக்கு மகிழ்வைத தருகிறது.

*** அவ்வாறு பதிவு செய்வதனால் கிடைத்த நன்மை என்ன?**

பதிவு செய்வதன் மூலம் அரசாங்கத்தின் இணைப்புச் செயற்பாடுகளுக்குள் சென்றிருக்கின்றோம். முல்லை மாவட்ட சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர் எமது இல்லத்தை மேற்பார்வை செய்து ஆலோசனைகளை வழங்கி வருகிறார். முல்லை மாவட்டத்தில் சிறந்த சிறுவர் இல்லத்திற்கான விருது எமது இல்லத்திற்கே கிடைத்திருக்கிறது. பதிவு செய்ததன் மூலம் சர்வதேச மயப்படுத்தப்பட்ட சிறுவர் இல்லமாக எமது சிறுவர் இல்லம் இருப்பதுடன் அனைவரது முகங்களுக்கும் இந்த இல்லம் சென்றுள்ளது. அதேவேளை இந்தச் சிறுவர்கள் எப்படி பராமரிக்கப்படுகின்றார்கள் அவர்களை எப்படிக் கையாளுகின்றோம் என்பது அனைவருக்கும் தெரியவந்தது இந்தப் பதிவின் ஊடாகத்தான். காந்தரூபன் அறிவுச்சோலை சிறுவர் இல்லம் தொடர்பாக ஆரம்ப காலங்களில் இது விடுதலைப் புலிகளின் தனித்துவமான சிறுவர் இல்லம். தமது உள்நோக்கத்திறகாக இதனை நடாத்துகின்றார்கள், போரில் சிறுவர்களை இணைப்பதற்கான ஒரு நடவடிக்கை என்று கூட சிங்களப்பத்திரிகையாளர்கள் தவறாகப் பரப்புரை செய்து வந்தனர்.



ஆனால் சமாதானத்தின் பின்னர். அவர்கள் இங்கு வந்து பார்த்து பிள்ளைகளுடன் நேரடியாக கதைத்ததன் பின்னர் அவர்கள் இதன் நியாயத்தன்மையைப் புரிந்திருக்கிறார்கள்.

*** காந்தரூபன் அறிவுச் சோலை சிறுவர் இல்லத்திற்கும் ஏனைய சிறுவர் இல்லங்களிற்கும் இடையிலான வேறுபாடுகள் எவை?**

ஏனைய சிறுவர் இல்லங்கள் ஒரு அடிப்படைத் திட்டத்தை கொண்டுதான் இயங்குகிறது. அதாவது அதற்குப் பொறுப்பாய் இருப்பவர் (டிரக்டர்) அவரை சேர் என்றுதான் கூப்பிடவேண்டும். இந்தக் கட்டமைப்பில்தான் ஏனைய சிறுவர் இல்லங்கள் இருக்கின்றன. ஆனால் எங்களது அறிவுச் சோலையில் அப்படி இல்லை. இங்கு உறவுமுறைக் கட்டமைப்புத்தான் உள்ளது. "அம்மா' என்கிறார்கள். வயதில் மூத்தவர்களை "ஐயா"என்கின்றார்கள் "அண்ணா" என்கின்றார்கள் பிரதானமாக பணி செய்கின்ற எங்களை (போராளிகளை) 'சித்தி' "மாமாக்கள்" என்றுதான் அழைக்கின்றார்கள். இந்த உறவுமுறைக் கட்டமைப்பு ஊடாக சிறுவர்கள் வளர்க்கப்படுவது இந்த இல்லத்தில்தான். இதற்கு அனைவரும் தமது வரவேற்பைத் தெரிவித்திருக்கிறார்கள். இந்த சமூகக் கட்டமைப்பு மிக முக்கியமானது. இதுதான் எமக்கும் மற்றவர்களுக்கும் இடையில் இருக்கின்ற முக்கிய வேறுபாடு என்றார் அவர்.

*** அறிவுச்சோலையின் செயற்பாடுகளுக்கான உதவிகள் எப்படிக் கிடைக்கிறது?**

காந்தரூபன் அறிவுச்சோலையின் நேரடி, ஒட்டுமொத்த செயற்பாடுகளுக்கான செலவுகள் அனைத்தையும் விடுதலைப்புலிகள் தான் பொறுப்பெடுத்துச் செய்து வருகின்றார்கள். அவர்கள் தமது வளங்கள் மூலமாகவே இதற்கான உதவிகளைச் செய்து வருகின்றார்கள். அதனுடன் தமிழீழத்தில் வாழுகின்ற அனைத்து மக்களின் உதவிகளும் கிடைக்கிறது. அதே வேளை புலம்பெயர் மக்களின் உதவி எங்களுக்கு செறிவாகக் கிடைக்கிறது.. சமாதான காலத்துக்குப் பிறகு அறிவுச்சோலையின் கட்டுமானத்துக்கும் சரி, புனரமைப்பிற்கும் சரி அவர்களது உதவி முக்கியமாக இருக்கிறது.

***உங்கள் பிள்ளைகளை வளர்க்கின்ற முறைகள் பற்றி ...................?**

அறிவுச்சோலை இல்லத்திற்குள் பிள்ளைகளின் செயற்பாட்டுக்கு நாம் ஒரு நேர அட்டவணையை ஒழுங்கு செய்து கொடுத்து இருக்கின் றோம்.காலை 5.30 மணிக்கு எழுந்தது முதல் இரவு 9.00 மணிக்கு உறங்கச்செல்லுகின்ற வரை அவர்கள் அந்த நேரக்கட்டமைப்புக்குள்தான் செயற்பட்டு வருகிறார்கள்.

***காந்தரூபன் அறிவுச்சோலையில் இணைகின்ற பிள்ளைகள் யுத்தத்தின் நேரடித்தாக்கத்திற்குள்ளானவர்கள் அந்தத் தாக்கம் அவர்களிடம் இப்போது எப்படி இருக்கிறது? அதனை நீக்குவதற்கு நீங்கள் எத்தகைய நடவடிக்கைகளை எடுத்து வருகின்றீர்கள்?**

யுத்தத்தின் தாக்கத்தை நேரடியாக அனுபவித்த சிறுவர்கள் ஏராளமானவர்கள் இருக்கிறார்கள். இவர்களின் மனதில் உறவுகளின் பிரிவும், யுத்தத்தின் தாக்கங்களும் இருக்கத்தான் செய்கிறது. இந்த நிலையில் இவர்களுடன் எப்படி அணுகுவது என்பது பற்றி கடுமையாகச் சிந்திக்க வேண்டியிருந்தது. இவர்களை இத்தகைய தாக்கங்களில் இருந்து திசைதிருப்பி வேறு வழிகளில் சிந்தனையைத் திருப்பக்கூடிய செயற்பாடுகளில் ஈடுபட்டோம். அதனால் தான் இசைக்கலையைப் பழக்குவதிலும், விளையாட்டில் அதிக ஈடுபாட்டை ஏற்படுத்துவதிலும், வெளிச்சமூகவாழ்க்கையை, நிகழ்வுகள் ஊடாகக் காட்டுவதிலும் நாங்கள் அவர்களுக்கு ஒரு கவுண்சிலின் முறையை பின்பற்றினோம்.

யுத்தபூமியில் எத்தகைய பாதிப்புகள் ஏற்பட்டிருக்கிறது என்பதை சமூகத்தின் ஊடாக காட்டியதன் பின்னர் ஒரு வகையான மாற்றம் எமக்குக் கிடைத்தது. அதன் பின்னர் நாங்கள் அவர்களுடன் அணுகியமுறை அவர்களுக்கு நாங்கள் விருப்பத்திற்குரியவர்களாக தென்படக்காரணமானது. அவர்கள் சோர்வடையாமல் இருப்பதற்கு அவர்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கி அவர்களின் மனத்தை மகிழ்வடையச் செய்தோம். அத்துடன் அவர்கள் தனிமைப்பட்டுப் போகாமல் இருப்பதற்கு எங்கள் நேர அட்டவணை வகைசெய்தது. இத்தகைய செயற்பாடுகள் அவர்களை அத்தகைய தாக்கத்திலிருந்து விடுபடச்செய்தது. இருநதாலும் அந்தத்தாக்கம் முற்றாக விடுபட்டது எனக் கூற முடியாது. எப்போதும் தாய் தந்தைபற்றிய சிந்தனை எந்த மனிதனிடமும் நிச்சயம் இருக்கும். ஆனாலும் நாம் அவர்களின் அந்த உறவை ஈடு செய்யும் வகையில் செயற்பட்டு வருகிறோம்.



அறிவுச் சோலையில் பிள்ளைகள் மோசமான மனநிலை பாதிக்கப்பட்டு இருப்பார்கள் என்று கற்பனை செய்து பார்த்து இங்கே சிலர் வருகிறார்கள். ஆனால் அந்தளவுக்கு இந்தப் பிள்ளைகள் இல்லை. கூடிக் குதூகலித்து மகிழ்வாக இருக்கின்றமை அனைவருக்கும் வியப்பைக் கொடுத்தது. இவர்களின் இந் நிலைக்கு உறவுமுறைப் பெயர்களை பயன்படுத்தியது. எவ்வளவுபொருட்களை ஒருவருக்கு வழங்கமுடியுமோ அவ்வளவு பொருட்களை இவர்களுக்கு வழங்கி இவர்களின் தேவை நிறைவு செய்யப்பட்டமை. அது மட்டுமன்றி சமூகத்தின் அனைத்து செயற்பாடுகளிலும் இவர்களை ஈடுபடுத்தியமையால் சமூகத்தின் அனைத்து அம்சங்களையும் புரிந்து கொண்டிருக்கிறார்கள். சமூகவாழ்வின் கஷ்ரங்கள் பற்றி முழுமையாக அறிந்திருக்கிறார்கள் அதைவைத்து இரண்டு வாழ்க்கை முறைபற்றியும் சிந்தித்து பார்த்திருக்கிறார்கள். அதன் மூலம் அவர்களிடம் தன் நம்பிக்கையை ஏற்படுத்தி இருக்கிறோம் என்றார். காந்தரூபன் அறிவுச்சோலையின் ஆளுநர் சபையின் செயலாளரும், அரச, அரசசார்பற்ற நிறுவனங்களுக்கும் அறிவுச் சோலைக்கும் இடையிலான இணைப்பாளராகவும் செயற்பட்டுவரும் கதிரவேல் ஐயாவிடம்



கதிரவேல் ஐயா

**அரசசார்பற்ற நிறு வனங்களுக்கும், அறிவுச் சோலைக்கும் இடையிலான தொடர்புகள் எப்படி உள்ளது எனக் கேட்டேன்.**

காந்தருபன் அறிவுச்சோலையை 1997 ஆம் ஆண்டு காலப் பகுதியில் சமூகசேவைத் திணைக் களத்தில் பதிவு செய்தோம். பின்னர் 2001ஆம் ஆண்டு அரசஅங்கீகாரம் பெற்ற சிறுவர் இல்லமாக எமது இல்லம் சிறுவர் நன்நடத்தை பராமரிப்புச் சேவைத் திணைக்களத்தில் பதிவு செய்யப் பட்டது. வெளிச்சமூகமட்டத்தில் இருந்து வந்த தவறான கருத்து இதன் மூலம் சிதைவடைந்தது. அரசசார்பற்ற வெளிநாட்டு நிறுவனங்கள் அறிவுச் சோலையுடன் மிக நெருக்கமாக இருக்கிறார்கள். இதைத்தான் அரசசார்பற்ற நிறுவனங்களும் விரும்புகிறார்கள். எங்களுக்கு உதவிகளை வழங்கி வரும் அரசசார்பற்ற வெளிநாட்டு நிறுவனங்களாக யுனிசெப், யூ.என்.எச். சீ.ஆர், ஐ.சி.ஆர்.சி, எஸ்.சீ.எவ்.பாஜ், போறூட், கேயர் போன்றன எங்களுடன் இணைந்திருக்கின்றன என்கிறார் அவர்.

* * * * * *



நடராஜா யோகேஸ்வரி

இந்தவகையில் இந்தச் சோலையில் குழந்தைப்பிள்ளைகளை பராமரித்து வருகின்ற நடராசா யோகேஸ்வரி அம்மாவைச் சந்தித்துப் பிள்ளைகளின் பராமரிப்புப் பற்றிக்கேட்டோம். அறிவுச்சோலையில் வயதடிப் படையில் பிரித்துத்தான் பிள்ளை

**நேர்காணல்**
**அ.லோகீசன்**

களை பராமரித்து வருகிறோம். பிள்ளைகளுக்கும் எங்களுக்கும் இடையில் மிகவும் நெருங்கிய உறவு இருக்கிறது. பிள்ளைகள் எங்களைத்தான் "அம்மா" என்று அழைக்கிறார்கள்.

சிறுவர்களுக்கு எந்தக் குறையும் இல்லை சகலவசதிகளும் இருக்கிறது. குழந்தைப் பிள்ளைகளை பாடசாலைக்குக் கொண்டு செல்கின்றபோது அவர்களுடன் ஒரு அம்மாவும் சேர்ந்து போய் வருவது வழக்கம. தேனீர் உணவு கூட நாங்கள் இங்கிருந்து கொண்டு போய கொடுப்போம. அப்படிமிகுந்த அக்கறையுடன் இந்தப்பிள்ளைகளை எங்கள் பிள்ளைகளாகப் பராமரித்து வருகிறோம். என்றார் அந்த அம்மா.

காந்தருபன் அறிவுச் சோலையில் நீண்ட காலமாக இருந்து வரும் இளைஞன் ஒருவரைச் சந்தித்து அறிவுச் சோலை வாழ்வு பற்றிக் கேட்டோம். அவர் தனது கதையை இப்படிக்கூறினாா.

நான் 12 வயதில் அறிவுச் சோலையில் இணைந்து கொண்டேன் எனது சொந்த இடம் கண்டி 86ஆம் ஆண்டு கலவரத்தின் பின்னர் எங்கள் சொந்த இடத்தில் இருந்து உயிரைகாப்பாற்ற முடியாத காரணத்தால் அகதிகளாக முல்லைத்தீவு ஒட்டுசுட்டானுக்கு வந்தோம். அங்கு அம்மா இறந்து விட்டார். எங்களில் இரண்டு பெண் சகோதரிகளும் மூன்று ஆண் சகோதரர்களும் ஆக ஐந்து பேர் இருந்தோம். அம்மா இறந்ததும் எங்கள் குடும்பம் சிதைந்து விட்டது. அதனால் நாங்கள் அரவணைப்புத்தேடி அலைந்தோம். எனது அக்கா 90ஆம் ஆண்டு செஞ்சோலையில் இணைந்து விட்டார். இதன் பின்னர் எனது அப்பாவும் இறந்துவிட்டார்.தம்பி ஆதரவு இன்றி தவித்துக் கொண்டிருந்தான். அவருக்கும் காந்தருபன் அறிவுச் சோலை ஆதரவுக்கரம் கொடுத்தது. நான் இங்கு இணையும் போது 12வயது ஆனால் அடிப்படை அறிவு கூட எனக்கு இருக்கவில்லை. அவர்கள் எனக்குக் கற்பித்து என்னை நல்ல முறையில் முன்னேற்றினார்கள். வாசிக்கத்தெரியாத எனக்கு இச்சோலை நல்ல படிப்பைத்தந்து 2000ஆம் ஆண்டு க.பொ.த.(சா/த) பரீட்சை எழுதினேன் அதில் எனக்கு 3டி,5சி என்ற பெறுபேறு வந்தது. 2004 ஆம் ஆண்டு வர்த்தகப்பிரிவில் தோற்றினேன் அதன் போது 2பி,சி பெறுபேறு வந்தது. இப்போது நான் மேலதிகப் படிப்புக்களை படிப்பதற்கு முயன்று கொண்டிருக்கின்றேன். இங்கு கல்வித்துறை தவிர்ந்த பல்வேறு வகையான தொழில் பயிற்சிகள் எங்களுக்கு வழங்கப்படுகிறது. நான் வீட்டில் இருந்திருந்தால் என்னசெய்வேன் என்று தெரியவில்லை என்று ஏக்கத்துடன் முடித்த அந்த மாணவனின் முகத்தில் புன்முறுவலையும், ஆளுமையையும் கண்டு கொண்டோம்.

இந்த நிலையில் தலைவர் அவர்களின் எண்ணத்தில் வளர்ந்து செயல்வடிவம் பெற்று உயர்ந்து நிற்கும் காந்தருபன் அறிவுச்சோலையின் எதிர்கால சிற்பிகளின் இதய இல்லங்களிலிருந்து விடைபெற்றோம்.



# ஹெல உறுமய பிக்குகளை தம்வசப்படுத்தி அரசியலமைப்பை மாற்றும் திட்டம் தோல்வி!

## -மீள் பரிசீலிக்க சனாதிபதி உத்தேசம்

(கொழும்பு)

ஹெலஉறுமய பிக்குகள் நால்வரைத் தமது கூட்டணிக்குள் இணைத்து கூட்டணி உறுப்பினர் ஒருவரை சபாநாயகராக நியமித்து அரசியலமைப்பை மாற்ற சர்வசன வாக்கெடுப்பை நடத்த மேற்கொள்ளப்பட்ட சனாதிபதி சந்திரிகாவின் திட்டம் வாய்ப்பளிக்காமல் விட்டதாக 'ராவய' சிங்களப் பத்திரிகை தெரிவித்துள்ளது.

அரசாங்கம் அரசியல் சபை ஒன்றின் மூலம் அரசியலமைப்பில் மாற்றத்தை ஏற்படுத்தத் திட்டமிட்டிருந்தது. அதற்கு தொண்டமானின் கட்சி எதிர்ப்புத் தெரிவித்தமையால் ஹெல உறுமயக்கட்சியின் ஆதரவைப் பெற்று அக்கட்சி உறுப்பினரை சபாநாயகராக நியமித்து அரசமைப்பை மாற்ற வரும் நவம்பர் 27ஆம் திகதி சர்வசன வாக்கெடுப்பை நடத்த அரசு திட்டமிட்டிருந்தது.

எனினும் எதிர்பார்த்த பிக்குகளின் ஆதரவு இறுதிநேரம் கிடைக்காமல் விட்டதால் அரசின் திட்டம் மீள் பரிசீலனைக்குட்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

அரசியல்சபை ஒன்றின் மூலம் அரசியலமைப்பை மாற்றுவது சட்டத்திற்கு முரணானது என சனாதிபதி ஆலோசகர் சில்வா ஏற்கனவே கூறியிருப்பது குறிப்பிடத்தக்கது.

சிறிலங்காவின் அரசியலமைப்பு விவகார அமைச்சர் டி.யூ. குணசேகரவிடம் இதுபற்றி 'ராவய' பத்திரிகை வினாவியபோது, அவ்வாறான வேலைத்திட்டம் பற்றி ஒன்றும் தமக்குத் தெரியாது என்றும், அறிவிக்கப்படவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

# எரிபொருட்களின் விலை மீண்டும் அதிகரிக்கப்படும்

சிறிலங்கா பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் உயரதிகாரி தெரிவித்துள்ள கருத்தின்படி, சிறிலங்காவில் பெற்றோல், டீசல் போன்ற எரிபொருட்களின் விலை மீண்டுமொருமுறை மிகப்பெரிய விலையுயர்வை எதிர்நோக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆகக்குறைந்தது 4 ரூபாயால் உயரவுள்ள பெற்றோல் மற்றும் டீசலின் விலை, மக்களின் நாளாந்த பொருளாதார நிலைப்பாட்டில் மிகப்பெரும் பாதிப்பை உருவாக்கவுள்ளதாகக் கூறப்படுகிறது.

வாகனங்களைச் சொந்தமாக வைத்திருப்பவர்களின் செலவு அதிகரிக்க வாய்ப்புள்ள நிலையில், வியாபாரிகள், விற்பனையாளர்கள், தங்களது பிரயாணச்செலவு அதிகரிப்பது குறித்தும், பொருட்களை விநியோகிக்கும் உற்பத்தியாளர்கள் எரிபொருள் விலையேற்றத்தினால் தங்களது அடிப்படைச் செலவீனத்தை அதிகரிப்பதனாலும் பொதுமக்களின் பொருளாதார நிலையில் பெரும் பாதிப்பு ஏற்படவுள்ளதாக எதிர்பார்க்கப்படுகிறது. (32)

# விவசாயம்,கல்வி,சுகாதாரம்; கூடுதல் நிதி ஒதுக்க முடிவு!

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கம் அடுத்த மாதம் சமர்ப்பிக்கவுள்ள அதன் முதலாவது வரவு செலவுத் திட்டத்தில் விவசாயம், கல்வி மற்றும் சுகாதாரம் ஆகிய துறைகளுக்குக் கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்யப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

விவசாய அபிவிருத்திக்கு கடந்த முறை ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியைவிடவும், இருமடங்கு நிதிஒதுக்கீடு செய்யப்படவுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

நாட்டின் அபிவிருத்தி மற்றும் வளர்ச்சி என்பவற்றில் முக்கிய பங்கு வகிக்கும் இந்தத்துறைகள் தொடர்ந்தும் புறக்கணிக்கப்பட்டு வருவதாக எழுந்துள்ள குற்றச்சாட்டுக்களையடுத்தே இம்முறை கூடுதல் நிதி ஒதுக்கீட்டை மேற்கொள்ள அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## புத்தர் சிலை திருட்டு

(கொழும்பு)

கடந்த 24 ஆம் திகதி ஆயுதபாணிகளாக வந்த குழுவொன்று அளவ்வ பௌத்த விகாராதிபதியை ஆயுத முனையில் பயமுறுத்தி அவரை ஒரு அறையில் பூட்டி வைத்துவிட்டு தங்க முலாம் பூசிய புத்தர் சிலையையும், பெறுமதி வாய்ந்த பல பொருட்களையும் கொள்ளையடித்துச் சென்றுள்ளதாக அளவ்வ பொலிசார் தெரிவித்துள்ளனர்.

# நவம்பர், டிசெம்பர் காலப்பகுதியில் சூறாவளி தாக்கும் அபாயமுள்ளது

## -வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை

(கொழும்பு)

வரும் நவம்பர், டிசெம்பர் மாதங்களில் இந்நாட்டில் சூறாவளி அபாயம் தோன்றியிருப்பதாக சிறிலங்காவின் வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

பொதுவாக இம்மாதங்களில் கடும் வேகத்துடன் காற்று வீசும் எனவும், அவை சிலவேளைகளில் சூறாவளியாக மாறலாம் எனவும் திணைக்கள அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

இதனால் மக்கள் போதிய முன்னெச்சரிக்கையுடன் இருக்குமாறும், வீடுகளுக்கு அண்மையாகவுள்ள மரக்கிளைகளை வெட்டிவிடுவதன் மூலம் விபத்துக்களைத் தவிர்க்கலாம் எனவும், நேரத்துடன் பாதுகாப்பான இடம்தேடிச் செல்ல முடியும் எனவும், அறிவிக்கப்பட்டுள்ளது. இவ்வகை சூறாவளி வடக்கு, வடமத்திய, கிழக்கு மாகாணங்களில் ஏற்படும் அறிகுறிகள் தென்படுவதாகவும் அவ்வறிக்கை தெரிவிக்கின்றது.

# சிறிலங்கா சனாதிபதித் தேர்தலில் ஜே.வி.பி. வேட்பாளரை நிறுத்தும்

(கொழும்பு)

அடுத்த சனாதிபதித் தேர்தலில் ஜே.வி.பி வேட்பாளர் ஒருவரும் போட்டியிடவிருப்பதாகத் தெரியவருகிறது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஜே.வி.பிக்கும் இடையில் ஏற்படுத்தப்பட்ட கூட்டணி ஒப்பந்தத்தை சிறிலங்கா சுதந்திரக்கட்சி மீறி நடப்பதே இதற்குக் காரணம் என்றும் தெரியவருகிறது.

கூட்டணி ஒப்பந்தம் இனியும் மீறப்படுமானால் எழுத்தில் எதிர்ப்புத் தெரிவிக்காமல் நடவடிக்கை மூலம் தமது எதிர்ப்பைக் காட்ட ஜே.வி.பி முடிவு செய்துள்ளது.

இதன் முதலாவது நடவடிக்கையாக மாகாண சபைகளுக்கு வழங்கப்படும் ஆதரவை விலக்கிக்கொள்வது என்று ஜே.வி.பி. தீர்மானித்துள்ளது.

நாட்டை முன்னேற்றும் திட்டத்திற்கு முன்னுரிமை அளித்து சிறிலங்கா சுதந்திரக்கட்சி செயற்படுமானால் சனாதிபதி வேட்பாளருக்குப் பூரண ஆதரவை வழங்குவதாக ஜே.வி.பி. அறிவித்துள்ளது.

# ஐ.நா. செயலர் பதவிக்கு சிறிலங்காவும் போட்டியிடும்!

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் பதவிக்கு சிறிலங்காவிலிருந்து ஒருவர் போட்டியிடவுள்ளதாக சனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது. எனினும் போட்டியிடவுள்ளவர் யார் என்பது பற்றி கடந்த வாரங்களில் தீவிர ஆலோசனைகளை சனாதிபதி நடத்தியுள்ளார்.

இது தொடர்பாக அடுத்த வாரம் சிறிலங்காவுக்கு விஜயம் மேற்கொள்ளும் அமெரிக்க பிரதி ராஜாங்க செயலர் றிச்சட்ஆர்மிரேஜிடம் தெரிவித்து அதற்கான அமெரிக்காவின் ஆதரவைப் பெறுவதென்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதற்குப் பல மேற்குலக நாடுகளும் ஆதரவு தெரிவிப்பதுடன் இந்தியா செல்லவுள்ள சந்திரிகா இவ்விடயம் தொடர்பாக இந்திய அரசிடம் தெரிவிப்பார்.

## பத்தரமுல்லயில் அலுவலகம்

(கொழும்பு)

சகல அமைச்சுக்களும் ஒரே இடத்தில் இயங்குவதற்கும், கட்டட நிர்மாணவேலைகள் யாவும பத்தரமுல்ல பிரதேசத்தில் மேற்கொள்வதற்கு நகர அபிவிருத்தி நிர்வாக அமைச்சர் தினேஸ் குணவர்த்தன தீர்மானித்துள்ளார்.

இக்கட்டட நிர்மாண வேலைகள் இம்மாதம் ஆரம்பமாகுமென அமைச்சர் கூறியுள்ளார்.

## 1000 கூட்டங்கள் நடத்த முடிவு

(கொழும்பு)

சனாதிபதித் தேர்தலை இலக்கு வைத்து நாடெங்கிலும் ஆயிரம் கூட்டங்களை நடாத்துவதற்கு ஐ.தே.கட்சி முடிவெடுத்துள்ளது.

இதன் முதற்கட்டம் வரும் சனவரி மாதம் முதல் வாரத்தில் ஆரம்பமாகும் எனக் கட்சியின் பிரதிச் செயலர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.


**நாகபூசணி அம்மன் திருமணசேவை**

எமது திருமண சேவையின் மூலம் சீதனம் கொடுக்க வசதி இல்லாமல் திருமணம் செய்யாதிருக்கும் பெண்கள், சீதனம் கொடுத்து திருமணம் செய்யக் கூடிய பெண்கள், சீதனத்தை எதிர்பாராமல் திருமணம் செய்யக்கூடிய ஆண்கள் மற்றும் சர்வதேச ரீதியில் வாழ்கின்ற ஆண், பெண் இரு பாலரின் ஜாதகங்களும் உள்ளன.

மற்றும் ஜாதகம், புகைப் படம் என்பவற்றுடன் நேரிலோ, அல்லது கடிதம் மூலமுமோ தொடர்பு கொள்ளவும்.

NO.70
STATION R.D
VAIRAVAR PULIYAN KULAM,
VAVUNIYA
SRI LANKA.
T.P:- 077 6630207
024 2222301
FAX:- 024 2222150
E.mail:- sri nagapusani amman thirumanasavai @yahoo.com.

(சி-10580)


**வீரவணக்கம்**

**4ஆம் ஆண்டு நினைவலைகளில்**

| தாயின் மடியில் | | தாயக மண்ணில் |
|---|---|---|
| 02 . 09 . 1969 |  | 01 . 11 . 2000 |

**செல்வம் யோகராசா**

[தமிழீழ காவல்துறை பரிசோதகர்
எழுதுமட்டுவாள்
முகமாலை]

எழுதுமட்டுவாள் பகுதியில் தவறுதலாக ஏற்பட்ட வெடி விபத்தின்போது 01.11.2000 அன்று வீரச்சாவடைந்தார். இம் மாவீரருக்கும் இந்நாளில் வீரச்சாவடைந்த அனைத்து மாவீரர்களுக்கும் எமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

"தமிழீழ காவல்துறையினர்" (5232)

**கண்ணீரில் கரைந்த மூன்றாண்டு நினைவுகள்**

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 29 - 06 - 1975 |  | 01 - 11 - 2001 |

**திருமதி சி. கோமுகி-ஜினா**

பருத்தித்துறை

ஆசிரியை கொக்கிளாய் அ.த.க. பாடசாலை

திதி:

நிதம் துயிலும்போது விழிமூடிய வேளையில்
விழித்துக் கொண்டது உனது
நினைவுகள், நெஞ்சை நிறைத்த
உனதுஅந்நாள் நினைவுகள்
தினமும் ஏதோ ஒரு கனவுகளாக...

ஆத்மா சாந்திக்காகப் பிரார்த்திக்கும்

ஐயனார் வீதி, பருத்தித்துறை

பாச உறவுகள்
சி.ராதன்

(5221)

# ஆளுநர் பிரச்சினையில் ஜெயலலிதாவின் செயல்

# இந்.இறையாண்மைக்கு ஊறு விளைவித்துள்ளது

## கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலர் குற்றச் சாட்டு

(சென்னை)

**தமிழக ஆளுநரின் விவகாரத்தில் தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா நடந்துகொண்ட விதம் குறித்து இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தமது பலமான கண்டனத்தை நேற்று வெளியிட்டுள்ளது.**

ஆளுநர் பிரச்சினையில் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவின் நடவடிக்கை இந்திய இறையாண்மைக்கும் நம்பகத்தன்மைக்கும் ஊறுவிளைவித்து விட்டதால் அவர் உடனடியாக இராஜினாமா செய்ய வேண்டுமென்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலர் நல்லகண்ணு கூறியுள்ளார்.

திருநெல்வேலியில் நேற்று செய்தியாளர்களிடம் பேசுகையில் மாநிலத்தில் சட்டம், ஒழுங்கு பாதிப்பு, நிர்வாக சீர்குலைவு, சனநாயக மறுப்புப் போன்றவை குறித்து தேவைப்பட்டால் புதிய ஆளுநனரிடம் வலியுறுத்தப்படுமென்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# சின்னச் சேலம் அகதிமுகாமிலுள்ள 58பேர் தாயகம் திரும்ப மனு

(சென்னை)

தமிழகத்தின் சின்னச் சேலம் அகதிகள் முகாமிலுள்ள இலங்கை தமிழ் அகதிகளில் 16. குடும்பங்களைச் சேர்ந்த 58 பேர் தாயகம் திரும்ப விருப்பம் தெரிவித்து தமிழக அதிகாரிகளிடம் விண்ணப்பித்துள்ளனர்.

இதனையடுத்து இவர்களை விசாரணை செய்த விழுப்புரம் மாவட்ட அதிகரிகள் இவர்கள் கடவுச்சீட்டுக்களை பெற்றுக் கொள்ள அவன செய்யுமாறு அதிகரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளனர். இதனையடுத்து சென்னையில் செயல்பட்டுவரும் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலம் (யு.என்.எச்.சி. சார்) இந்த அகதிகளின் பயண ஏற்பாடுகளை செய்துவருகிறது. இந்த 16 குடும்பங்களில் 22 ஆண்கள்,18பெண்கள்,9 சிறுவர்கள்,9சிறுமிகள் அடங்கியுள்ளனர்

சின்னச் சேலம் அகதிகள் முகாமில் 68 குடும்பங்களைச் சேர்ந்த 110 ஆண்கள், 77 பெண்கள்,21சிறுவர்கள்,21சிறுமிகள், வசித்து வருகின்றனர்.

# மணிப்பூரில் படையினருக்கு சிறப்பு அதிகாரம்; விலக்குவதற்கான பேச்சுக்களுக்கு ஏற்பாடு!

(புதுடில்லி)

மணிப்பூரில் ஆயுதப்படைகளிற்கான சிறப்பு அதிகார சட்டத்தை விலக்கிக் கொள்வது பற்றி பிரதமர் மன்மோகன்சிங்குடன் பேச்சு நடத்த ஏதுவாக நீதிமன்றத்தின் காவலில் வைக்கப்பட்டிருந்த 36 அகுன்தா லூக்கிஸ் தலைவர்கள் நேற்றுமுன்தினம் மாலை விடுதலை செய்யப்பட்டுள்ளார்கள்.

மத்திய தலைவர்களுடன் பேச்சு நடத்துவதற்காக இந்த இயக்கத்தின் பிரதிநிதிகள்குழு நேற்றுப் புதுடில்லி புறப்பட்டுள்ளனர். அகூன்தாலூக்கில் அங்கம் வகிக்கும் பல்வேறு ஸ்தாபனங்களின் உயர்தலைவர்கள் இந்தக் குழுவில் இடம் பெற்றுள்ளார்கள் இதேவேளை மாநிலத்தில் ஹிந்தி போதிப்பதற்கான தடையை நிறுத்தி வைக்கவும் இந்த அமைப்பு ஒப்புக் கொண்டுள்ளது.

# பீகாரில் இரு கா.உறுப்பினரை பதவி நீக்கியது சரியே

### -உச்ச நீதிமன்றம் தீர்ப்பு

(புதுடில்லி)

பீகார் சட்டப்பேரவையின் இரண்டு காங்கிரஸ் உறுப்பினர்கள் இந்த ஆண்டு மே மாதம் நடைபெற்ற மக்களவைத்தேர்தலில் கட்சிக்கு எதிராக போட்டியிட்டவர்கள் என்ற அடிப்படையில் அவர்களைப் பதவி நீக்கம் செய்தது சரிதான் என்று உச்ச நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

கட்சித்தகவல் அடிப்படையில் அவர்களைப் பதவி நீக்கம் செய்தது சரிதான் என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்புக் கூறியுள்ளது.

# சனநாயக முன்னணி அரசு மகாராஷ்டிராவில் இன்று பதவி ஏற்கும்

(புதுடில்லி)

மகாராஷ்டிராவில் காங்கிரஸ் தலைமையிலான சனநாயக முன்னணி அரசு இன்று பதவியேற்கின்றது.

முதலமைச்சராகப் பதவியேற்கவுள்ள முலாகாஷ்தேஷ்வும் துணைமுதலமைச்சராகப் பதவியேற்கப்போகும் ஆராப்பட்டேலும் நேற்று முன்தினம் ஆளுநரைச்சந்தித்து ஆட்சி அமைக்க உரிமை கோரியுள்ளததுடன் கூட்டணிக்கு ஆதரவுதெரிவிக்கும் 165 எம்.எல். ஏக்களின் பட்டியலையும் ஆளுநரிடம் சமர்ப்பித்துள்ளார்.

# இராமர் ஆலயம் கட்டும் பிரச்சினையை பேசித்தீர்மானிக்காவிடின் நீதிமன்றமே முடிவெடுக்கும்

### - முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ச் பெனாண்டஸ்

(புதுடில்லி)

இராமர் ஆலயம் கட்டும் பிரச்சினையில் தேசிய சனநாயகக் கூட்டணியை எதிர்க்கும் நிலையிலிருந்து வி.ஜே.பி விலகவில்லையென்று ஐக்கிய ஜனதாத் தலைவர் ஜோர்ச் பெர்னாண்டஸ் கூறியுள்ளார்.

நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் பேசிய வேளை இந்தப்பிரச்சினைக்குச் சம்பந்தப்பட்ட தரப்பினருடன் பேச்சுக்கள் மூலம் தீர்க்கப்படலாம். இல்லையென்றால் நீதிமன்றத் தீர்ப்பே அனைவரையும் கட்டுப் படுத்துவதாக இருக்கும் என்பதில் இந்தியா உறுதியாக இருக்கும் என்றும் அவர் கூறினார்.

மேலும் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசின் செயற்பாடு குறித்து கருத்துத் தெரிவிக்கையில் மன்மோகன்சிங் அரசு விவசாயிகளுக்கு நிவாரணமளிக்க தவறிவிட்டதென்றார்.

இதேவேளை ஜோர்ச்பெர்னாண்டஸ் சின் இக் கருத்தினால் ஐக்கியஜனதா தளம் வி.ஜே.பி. யுடன் உறவுகளை துண்டித்துக் கொள்ளும் சாத்தியம் எதுவுமில்லையென்றும் தெரிவிக்கப்படுகிறது

# ஐ.முற்போக்குக்கூட்டணி அரசின் 5மாதகால ஆட்சி அனைத்தும் நிறைந்தகலவையென்கிறது சி.பி.ஐ

(சென்னை)

ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசின் ஐந்து மாதகால செயற்பாடு அனைத்தும் நிறைந்த கலவை என சி.பி.ஐ. கூறி உள்ளது.

சி.பி.ஐ.கட்சியின் இரண்டுநாள் தேசியக் கூட்டத்திற்குப் பின்னர் செய்தியாளர்கள் மத்தியில் உரை யாற்றும்போதே கட்சியின் பொதுச் செயலர் ஏ.வி.வரதன் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறுகையில் அரசின் நோக்கானது இன்னமும் குறைந்தபட்ச பொதுச் செயல் திட்டத்தில் பொருந்திவிடவில்லை எனவும் இந்திய அயல்நாட்டு வங்கிகள் தனியார் இந்திய வங்கிகளில் பங்குகொள்வனவு செய்யலாம் என இந்திய நிதி அமைச்சர் ப.சிதம்பரம வெளியிட்ட அறிவிப் பையும் தமது கட்சி எதிர்ப்பதாக வரதன் கூறினார்.

# வங்கக்கடலின்– மத்திய பகுதியில் குறைந்த காற்றமுத்தம் நீடிப்பு

(சென்னை)

வங்கக் கடலில் மத்தியகுடா பகுதியில் தமிழ் நாட்டிற்கும் ஆந்திராவிற்குமிடையே குறைந்த காற்றழுத்தம் நீடிப்பதால் தமிழகத்திலும் புதுவையிலும் இன்னும் இரண்டு நாட்களிற்கு மழை பெய்யலாம் என சென்னை வானிலை ஆய்வுடை பம் தெரிவித்துள்ளது. இதேவேளை பல இடங்களில் கடும் மழை பெய்யலாம் என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஆயுதங்களை ஒப்படைத்தாலே தீவிரவாதிகளுடன் பேசுவோம்

### -ஆந்திர மாநில அரசு அறிவிப்பு

(புதுடில்லி)

சி.பி.ஐ. மாவோயிஸ்டுக்கள் ஆயுதங்களை ஒப்படைத்தால்தான் அரசுடன் பேச்சு நடத்தப்படுமென்று ஆந்திரப்பிரதேச அரசு கூறியுள்ளது.

இரண்டாவது சுற்றுப் பேச்சுவார்த்தைகளில் ஆயுதப் பிரச்சினை முக்கிய விடயமாக்குவது என்று அரசு தீர்மானித்ததாக மாநில அமைச்சரவை கூட்டமொன்றிக்குப்பின்னர் செய்தித் துறையமைச்சர் தெரிவித்துள்ளார்.

# கூட்டணித் தலைவராக நாராயன்ரான்

(புதுடில்லி)

மகாராஷ்டிராவின் சட்டசபையின் எதிர்க்கட்சியான பா.ஜனதா சிவசேனைக் கூட்டணியின் தலைவராக நாராயன்ரான் மீண்டும் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

மகாராஷ்டிராவின் அரசு ஐந்தாண்டுகள் ஆட்சியைப் பூர்த்திசெய்யுமென தேசியவாதக் காங்கிரஸ் கட்சித்தலைவரும், மத்திய வேளாண்துறை அமைச்சருமான சரத்பவார் கூறியுள்ளார்.

# சர்வதேச சந்தையில் விலை குறைவதால் எண்ணை விலையை உயர்த்த வேண்டாம்

### – நிறுவனங்களுக்கு இந்திய அரசு பணிப்பு

(புதுடில்லி)

பெற்றோல்,டீசல் விலைகளை அடுத்தமாதம் 15 ஆம்திகதி வரை உயர்த்தவேண்டாமென எண்ணெய் நிறுவனங்களை மத்திய அரசு கேட்டுள்ளது.

அமெரிக்க சனாதிபதி தேர்தலுக்குப் பின்னால் இவ் விலையேற்றம் பற்றி அரசு முடிவு செய்யுமென தெரிவிக்கப்படுகின்றது. சர்வதேச சந்தையில் கச்சாய் எண்ணெயின் விலை குறைவடைந்துள்ளதைத் தொடர்ந்து எண்ணெய் நிறுவனங்களுக்கு இந்திய மத்திய அரசு இந்த பணிப்புரையை விடுத்துள்ளது.

இதே வேளை எண்ணெய் விலையை உயர்த்த வேண்டுமென எண்ணை நிறுவனங்கள் இந்திய அரசைக் கோரியிருந்தது. குறிப்பிடத்தக்கதாகும்.


தகவல் தொழிநுட்ப கற்கைநெறிகள்




ஆரம்பிக்கப்படவுள்ளது.

பதிவுகள் 30/11/04 முதல் ஏற்றுக்கொள்ளப்படும் என்பதனை மகிழ்வுடன் அறியத்தருகின்றோம்.

பாடநெறிகள் யாவும் மூன்றாம் நிலை தொழில் கல்வி அமைச்சின் அங்கீகாரம் பெற்றவை.

கணினியியல் கல்லூரி


The Computer Collage

யாழ்சாலை, கிளிநொச்சி.

(Affiliated to Asian Computers)


## ஆத்மசாந்திப் பிரார்த்தனை

அன்று இவ்வுலகில



இன்று அகிலவுலகில்

### அமரர் ரத்தினம் தர்மசீலன்


ஊற்றெடுத்துப்பாய்கின்ற உயர்ந்த அன்பு
உள்ளமது கள்ளமறியாத போக்கு
நேற்றுவரை நின்வடிவம் கண்டோம் இன்று
நீதி கிடைக்கும் வடிவத்தை பார்த்து நெஞ்சம்
ஆற்றமுடியாததுயர்க் கடலுக்கானோம்
அரியவனே நீ மிகவிரைவில்
ஈசனடி சேர்ந்த மாயம் மெய்மயங்கி உன் உறவுகள்
நேற்றைய தினம் அகால மரணமடைந்த அமரர் தர்மசீலன்
குடும்பத்தவர்களுக்கு என் விழிகலங்கிய துளிகள்சில...

அ.சிவலோகநாதக்குருக்கள்,
(ஜெயம் ஐயா)
நாகதம்பிரான் கோயில்,
புளியம்பொக்கணை.

(5233)

### கராச்சி டெஸ்ட் போட்டி

# சமன் செய்யப் போராடும் சிறிலங்கா பாகிஸ்தான் அணிக்கு வெற்றி வாய்ப்பு




பாகிஸ்தான்-சிறிலங்கா அணிகளுக்கிடையில் கராச்சியில் நடைபெற்று வரும் இரண்டாவதும் இறுதியுமான டெஸ்ட்கிரிகெட்போட்டி பாகிஸ்தான் அணிக்கு வெற்றி வாய்ப்பை அதிகரித்துள்ளது.

சிறிலங்காவின் ஆறு விக்கெடடுக்களைச் சாய்த்து பாகிஸ்தானுக்கு வெற்றி பெறும் வாய்ப்பை பிரகாசமாக்கியுள்ளார். சுழற் பந்து வீச்சாளர் டினேஸ்கனேரியா,


பாகிஸ்தான் அணியைவிட 270 ஓட்டங்கள் பின்னிலையில் இருந்த சிறிலங்கா சங்கக்கார, ஜெயசூரிய ஆகியோரின் சதத்தின் உதவியுடன் ஓரளவு முன்னேற்றமடைந்தபோதும் தற்போது ஏழு விக்கெட்டுக்களை இழந்து 91 ஓட்டங்கள் முன்னிலையில் உள்ளது.

நேற்று முன்தின ஆட்ட நேர முடிவின்போது ஒரு விக்கெட்டை இழந்து 134 ஓட்டங்களைப் பெற்றிருந்த சிறிலங்கா அணி நேற்றைய நான்காம் நாள் ஆட்டம் ஆரம்பித்து. சிறிது நேரத்தில் சனத்ஜெயசூரியவின் விக்கெட்டை கனேரியாவிடம



இழந்தது. இவர் 107 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து சங்கக்காரவுடன்



ஜோடி சேர்ந்த ஜயவர்த்தன நிதானமாக ஆடி ஓட்டங்களைக் குவித்தபோதும் அவரையும் டினேஸ் கனேரியா நிலைத்து நிற்கவிடவில்லை. 32 ஓட்டங்களுடன் வெளியேற்றினார்.

அவரைத் தொடர்ந்து ஆடுகளம் நுழைந்த திலான் சமரவீர அடித்தாடுவதை விடுத்து தடுத்தாட்டத்தை மேற்கொள்ள மறுமுனையில் குமார் சங்கக்கார நிதானமாக ஆடி சதம் அடித்து சிறிலங்காவின் ஓட்ட எண்ணிக்கையை அதிகரித்தபோதும், தொடர்ந்து நிலைத்திருக்க முடியவில்லை. அவர் 138 ஓட்டங்களை பெற்று ஆட்ட மிழந்தார்.

இதனை அடுத்து வந்த எவராலும் கனேரியாவின் பந்து வீச்சுக்கு முன்னால் நின்று நிலைத்து ஆடமுடியாது சொற்ப ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தனர்.

நேற்றைய நான்காம் நாள் ஆட்டநேர முடிவின்போது சிறிலங்கா 7 விக்கெட்டை இழந்து 361 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. இதன் மூலம் பாகிஸ்தான் முதல் இனிங்ஸ் ஓட்ட எண்ணிக்கையை விட 91 ஓட்டங்கள் முன்னிலையில் உள்ளது. பந்துவீச்சில் டினேஸ் கனேரியா 45 ஓவர்கள் பந்து வீசி 102 ஓட்டங்களை விட்டுக் கொடுத்து ஆறு விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.

இன்று போட்டியின் இறுதி நாள் ஆட்டம் நடைபெறவுள்ளது. அனேகமாக பாகிஸ்தான் அணிக்கே வெற்றி வாய்ப்பு இருப்பதாக கருதப்படுகின்றது.

அதாவது 200 ஓட்டங்கள் சிறிலங்கா அணி தன்னை முன்னிலைப்படுத்திக் கொண்டால் மாத்திரமே பாகிஸ்தானின் வெற்றி வாய்ப்பைத் தடுத்து நிறுத்த முடியும் எனவும் கருதப்படுகிறது.

## 200 விக்கெட், 2000 ஓட்டம் பெற்றவராகிறார் வாஸ்



சிறிலங்கா கிரிக்கெட் அணியின் ஆரம்பப் பந்து வீச்சாளரும் சகலதுறை ஆட்டக்காரருமான சமிந்த வாஸ் ஒரு ஓட்டத்தைப் பெற்றால் டெஸ்ட் போட்டிகளில் 200 விக்கெட்டுக்களையும் 2000 ஓட்டங்களையும் பெற்ற வீரர் என்ற பெருமையைப் பெறுவார்.

இந்தப் பெருமையை ஏற்கனவே தென்னாபிரிக்காவின் சேன்பொலக், இங்கிலாந்தின் அன்ரூபிளின்டெஸ், பாகிஸ்தானின் இம்ரகான், வசீம் அக்ரம், இந்தியாவின் கபில்தேவ் ஆகியோர் பெற்றுள்ளனர்.




## இந்திய சுற்றுலா, தென்னாபிரிக்க அணியில் இந்தியாவை தாயகமாகக் கொண்ட வீரர்

இந்தியாவிற்கு சுற்றுப்பயணம் மேற்கொள்ளவிருக்கும் தென்னாபிரிக்க கிரிக்கெட் அணியில் இந்தியாவின் ஹசிம்மொகமட் அம்லா என்ற 21 வயது துடுப்பாட்டவீரர் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளார்.

14 பேர் கொண்ட அணியில் மேலும் 3 பதுமுகங்கள் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர். அவர்கள் சகலதுறைவீரர் சென்டர் டிபிரயன் வேகப்பந்து வீச்சாளர் அல்போன்சோ தோமஸ், விக்கெட்கீப்பர் தாமி சொலகிவ் என்போராவர். அணியின் உப தலைவராக நிகிபோஜே நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மேற்கிந்தியத்தீவு கிரிக்கெட் அணிக்கு முதலாவது வெளிநாட்டு பயிற்சியாளர்


மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கு பயிற்சி வழங்கும் முதலாவது வெளிநாட்டவர் என்ற பெருமையை அவுஸ்திரேலிய கிரிக்கெட் அக்டமி யின் பயிற்றுனரான பெனட்கிங் பெறுகிறார்.

I.C.C மினி உலகக் கிண்ணத்தைக் மேற்கிந்தியத் தீவு கைப்பற்றியதும் பயிற்சியாளர் கஸ்லோகி பதவி விலகிவிட்டார். 39 வயது கிங் அடுத்த வாரம் இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவார். உடற்கல்வி ஆசிரியராகவும், கிரிக்டெ் அணி வீரராகவும் பணியாற்றிய இவர் இங்கு பயிற்சியாளராக வருவதற்கு முன் மேற்கிந்தியத்தீவுகளின் கிரேக் சப்பல் பீட்டர் மொறிஸ் ஆகியோருடன் பேச்சு நடத்தியுள்ளார்.

குறிப்பாக இளையோரின் கிரிக்கெட்டை வளர்ப்பதில் அவுஸ்திரேலியாவில் கூடுதல் பங்காற்றியவர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## வீரர்களின் ஒற்றுமையும், திடகாத்திரமுமே இந்தியாவுடனான சாதனை வெற்றிக்கு காரணம்

### — அலன்போடர் பெருமிதம்



இந்தியாவை அவுஸ்திரேலியா வெற்றிகொண்டு 35 ஆண்டுகளின் பின்னர் அந்த மண்ணில் வைத்து சாதனை ஏற்படுத்தியது.இது உண்மையிலேயே உணர்வு பூர்வமான வெற்றியாகவும், உணர்வு பூர்வமான சாதனையாகவுமே தான் கருதுவதாக அவுஸ்திரேலிய அணியின் முன்னாள் தலைவர் அலன் போடர் தெரிவித்துள்ளார்.

இறுதியாக சஹீர்கானின் பிடியை டேமியன் மாட்டீன் எடுத்து தொடரை வெற்றிகொண்ட போது உணர்வு பூர்வமான ஒரு மகிழ்ச்சியை அனுபவித்தோம் எனத் தெரிவித்த அவர்.

அவுஸ்திரேலியா இந்திய மண்ணில் வைத்து டெஸ்ட போட்டித் தொடரில் வெற்றி கொள்வதற்குத்தான் காரணமாக அமையவில்லை என்ற கவலை இருந்து வந்ததாகவும் அந்த கவலை தற்போது விடுபப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலிய அணி எதையும் சாதிக்க முடியும் என்பதற்கு இது ஒன்று மாத்திரம் குறையாக இருந்ததாகவும் அந்தக்குறை தற்போது நிவர்த்தி செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஏற்கனவே 2001 ஆம் ஆண்டு ஸ்ரீவோவின் தலைமையிலான அவுஸ்திரேலிய அணிக்கு தொடரைக் கைப்பற்றும் சூழல் இருந்தாலும் கூட இறுதி இரண்டு போட்டிகளிலும் மிகச்சிறப்பாக இந்திய அணி வெற்றிபெற்றதால் தொடரைக் கைப்பற்ற முடியாது போனது.

அத்துடன் மார்க்டெயிலர் 1998 பருவகாலத்தில் கூட வெற்றியைப் பறிக்கமுடியாது போனதையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது எமது அணி வீரர்கள் அனைவருக்கும் உரித்தான வெற்றி. எமது அணியின் ஒற்றுமையும் திடகாத்திரமும் தான் இந்த வெற்றிக்கு காரணம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## ஓப்பன் டென்னிஸ் போட்டி காலிறுதியில் அந்ரே அகாசி

கடந்த வியாழனன்று ஸ்டொக் கோமில் நடைபெற்ற ஓப்பன் டெனிஸ் பந்தயத்தில் அந்ரே அகாசி வெற்றிபெற்றுள்ளார். அவர் ஜோர்க்மேன் என்பவரை 6-3, 6-4 என்ற செட்கணக்கில் வென்று காலிறுதிக்குத் தகுதி பெற்றார்.

இவ்வெற்றி பற்றி அவர் தெரிவிக்கும் போது நல்ல அனுபவமுள்ள அதேவேளை 30 வயதைத் தாண்டிய ஒருவருடன் ஆடி வெற்றிகொளவது தனக்கு மிகுந்தகடினம் என்றார். எனினும் இவ்வெற்றி தனக்கு முக்கியமானதாகவிருந்தாலும் அவரின் நம்பிக்கையற்ற ஆட்டத்தினால் தனக்கு வெற்றி கிடைத்ததாகத் தெரிவித்துள்ளார். முதலாவது சேவிசில் 2-0 என்ற கணக்கில் அவர் முன்னனி வகித்த போதும் பின்னர் 5-3 என்ற நிலையும் 6-3 என்ற நிலையும் ஏற்பட்டதாக அவர் தெரிவிக்கிறார்.

காலிறுதியில் அவர் ஸ்பெயின் வீரர் பெர்னான்டோ வெடஸ் கோவை எதிர்த்து ஆடுவார்.

## 16 வயதுக்குட்பட்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டி கிளி ம.வி.யை தோற்கடித்தது முல்லை.ம.வி.அணி

16வயதுக்குட்பட்ட முல்லைத்தீவு ம.வி.அணிக்கும், கிளிநொச்சி ம.வி.அணிக்கும் இடையில் நடைபெற்ற மட்டுப்படுத்தப்பட்ட 30 ஓவர் கொண்ட கிரிக்கெட் போட்டியில் முல்லைத்தீவு ம.வி.அணி 44 ஓட்டங்களால் வெற்றி பெற்றுக் கொண்டது.

கிளிநொச்சி பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற இப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய முல்லைத்தீவு ம.வி.அணி 29.3 ஓவரில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 131 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் ஜெனகராஜ் 55 ஓட்டங்களை பெற்று. முல்லை ம.வி.அணியின் வெற்றிக்கு உறுதுணையாக அமைந்தார்.

பதிலுக்கு 132 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் துடுப்பெடுத்தாடிய கிளிநொச்சி ம.வி.அணி 27 ஓவர் நிறைவில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 86 ஓட்டங்களை மாத்திரம் பெற்று தோல்வி அடைந்தது. (கு,ச)



முல்லை.ம.வி.அணி


## போட்டியின் போது மரணித்த பிரேசில் வீரருக்கு துக்கம் அனுஷ்டிப்பு

உள்ளூர் போட்டியொன்றின்போது மாரடைப்பால் மரணித்த பிரேசில் உதைப்பந்தாட்ட வீரர் சர்ஜினோவுக்காக அணி வீரர்கள் துக்கம் அனுஷ்டித்துள்ளனர்.

பிரேசிலின் சாவேகேடனோ,சாவேபோலோ அணிகளுக்கிடையிலான போட்டியின் போதே இவருக்கு நெஞ்சுவலி ஏற்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட 40 நிமிடங்களில் உயிர் பிரிந்தது.

பின்னர் ஆட்டம் கைவிடப்பட்டு இரு அணி வீரர்களும் மைதானத்தில் கைகோர்த்து வட்டமிட்டு பிரார்த்தனையில் ஈடுபட்டனர்.

அவர் ஒரு சிறந்த வீரர் என்றும் நட்புடன் பழகக் கூடிய சிறந்த நணபன் எனவும் சகவீரர்கள் கூறியதுடன் அவரின் மறைவு மாபெரும் இழப்பு என்றும் தெரிவித்துள்ளனர்.



## சிந்தனைக்கு

அரசியல் என்பது மக்கள் மீது ஆட்சியை நடாத்தும் அல்லது அதிகாரத்தைச் செலுத்தும் விவகாரம் அல்ல. அரசியல் என்பது மக்களுக்குச் சேவை புரியும் பணி, மக்களின் நலவாழ்வுக்கு ஆற்றப்படும் தொண்டு.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 01-11-2004
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் Daily@ eezhanatham. com

## அடுத்த சனாதிபதித் தேர்தல்?

"சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் பதவிக்காலம் 2006 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் முடிவடைவதற்கு முன்னர் சனாதிபதித் தேர்தல் நடத்தப்படமாட்டாது" என்ற அமைச்சர் மங்கள சமரவீரவின் அறிவிப்பானது சிறிலங்கா அரசியலில் கொதிநிலை ஒன்று உருவாவதற்கு வழி சமைக்கலாம் என அரசியல் நோக்கர்கள் ஆரூடம் தெரிவிக்கின்றனர்.

ஏனெனில் பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.கட்சியோ சனாதிபதி சந்திரிகாவின் பதவிக்காலம் 2005 ஆம் ஆண்டின் இறுதியுடன் முடிவிற்கு வருவதினால் அவ்வாண்டிலேயே சனாதிபதித் தேர்தல் நடாத்தப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் உறுதியாகவுள்ளது. இது குறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள முன்னாள் அமைச்சரும் ஐ.தே.கட்சியின் முக்கியஸ்தருமான பேராசிரியர் பீரிஸ் அவர்கள் "அடுத்த வருடம் சனாதிபதித் தேர்தல் நடத்தப்பட வேண்டும்" என்பதே எமது நிலைப்பாடாகும் எனக் குறிப்பிட்டார்.

இந்நிலையில் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் பதவிக்காலம் 2005 டிசம்பருடன் முடிவடையவில்லை எனின் இதற்கு எதிராக ஐ.தேகட்சி அரசியல் நடவடிக்கையில் இறங்குகையில் சிறிலங்கா அரசியலில் பெரும் நெருக்கடி உருவாவதற்கும் சட்டம் ஒழுங்கு பாதிப்படைவதற்கும் அதிகமான வாய்ப்புக்கள் உண்டு.

ஆனால் சனாதிபதி சந்திரிகா தரப்பு 2006ஆம் ஆண்டு டிசெம்பர் மாதத்திற்கு முன்பதாக தேர்தலுக்கான வாய்ப்பே இல்லை என உறுதிபட அறிவித்துள்ளமை அரசியற் களத்தைச் சூடேற்றுவதாகவுள்ளது. இந்நிலையானது பெரும் மோதலுக்குள் நாட்டையிட்டுச் செல்வதற்கான சூழ்நிலையை உருவாக்கக்கூடியது.

சந்திரிகா குமார்துங்க 1999இல் தேர்தலில் வெற்றி பெற்றதோடு சத்தியப் பிரமாணம் செய்ததாகவும் பின்னர் 2000ஆம் ஆண்டிலும் இரண்டாவது தடவையாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டதாகத் தெரிவிக்கின்றனர். இதனைப் பிரதம நீதியரசரும் உறுதிப்படுத்துபவராகவுள்ளார்.

ஆனால் தற்பொழுது ஐ.தே.கட்சி எழுப்பும் கேள்வியானது ஒரு நாட்டின் தலைவி இரகசியமாகச் சத்தியப்பிரமாணம் போன்ற தொன்றைச் செய்துகொள்ள முடியுமா என்பதே. ஐ.தே.கட்சியின் நிலைப்பாட்டின்படி அது ஏற்றுக்கொள்ளத்தக்கதொன்றல்ல.

ஆனால் அரசாங்கத்தரப்பு சனாதிபதி சந்திரிகாவின் முதல் பதவிக்காலம் 2000 ஆண்டின் இறுதியிலேயே முடிவடைகின்றது என வாதிட முனைகிறது. அத்தோடு சனாதிபதி ஒருவர் தனது இரண்டாவது பதவிக்காலத்திற்கான தேர்தலை எப்பொழுது வேண்டுமானாலும் நடத்துவதற்கு அரசியல் யாப்பு அனுமதித்துள்ளது என்பதாகும்.

ஐ.தே.கட்சியினரோ சனாதிபதித் தேர்தலை சந்திரிகா நடத்தியிருக்கலாம். ஆனால் பதவிக்காலம் முடிவடைய ஓராண்டிற்கு முன்னர் இரண்டாவது பதவிற்காலத்திற்கான தடவை சத்தியப்பிரமாணம் செய்ததேன்? என்ற கேள்வியை எழுப்புகின்றனர். அத்தோடு 2000 ஆண்டில் இரண்டாவது தடவையும் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இரகசியமாக சத்தியப்பிரமாணம் செய்வதென்பதையும் ஏற்க மறுக்கின்றனர். அது மட்டுமல்ல சனாதிபதி ஒருவர் இரகசியமாகச் சத்தியப்பிரமாணம் செய்வதென்பது ஏற்கத்தக்கதல்ல எனவும் தெரிவிக்கின்றனர். அத்தோடு ஒரு பதவிக்காலத்திற்கு இரண்டு தடவைகள் எவ்வாறு சனாதிபதி சத்தியப்பிரமாணம் செய்ய முடியும் எனவும் கேள்வியெழுப்பப்படுகின்றது.

இதேவேளை சனாதிபதி சந்திரிகாவின் பதவிக்காலம் 2005ஆம் ஆண்டு டிசெம்பர் மாதத்துடன் முடிவிற்கு வருவதாகத் தேர்தல் ஆணையாளர் முன்னர் தெரிவித்திருந்தார். இந்நிலையில் சனாதிபதியின் பதவிக்காலம் குறித்த சர்ச்சையானது தேர்தல் ஆணையாளரின் முடிவிற்கும் அப்பாற்பட்ட விதத்தில் செல்வதாகவே கொள்ள வேண்டியுள்ளது. அதாவது அடுத்த சனாதிபதித் தேர்தல் என்பது உச்ச நீதிமன்றம் செல்லும் நெருக்கடியாக நிச்சயம் மாறும் என்றே எதிர்பார்க்கலாம்.

ஆனால் எதிர்க்கட்சியின் எதிர்பார்ப்பிற்கு ஏற்ப 2005 இல் சனாதிபதித் தேர்தல் நடைபெறுவதற்கான வாய்ப்புக்கள் மிகவும் அரிதாகவே இருக்கும். ஏனெனில் பிரதம நீதியரசரே சனாதிபதி சந்திரிகாவிற்கு 3ஆவது தடவையாகச் சத்தியப்பிரமாணம் செய்துவைத்தார் என்பதும்-பிரதம நீதியரசர் சனாதிபதி சந்திரிகாவிற்கு மிகவும் வேண்டியவர் என்பதும்உச்ச நீதிமன்றத் தீர்ப்பில் செல்வாக்குச் செலுத்தலாம். இந்நிலையில் அரசியல் யாப்பு விவகாரமாயினும் நீதி கிட்டுமோ என்பது சந்தேகமே.

# மனித உரிமை சட்டதிட்டங்களை புலிகள் மதித்து நடந்து கொள்கின்றனர்

### இல. மனித உரிமை ஆணைக்குழுவின் பிரதிநிதி செல்வகுமாரன்

தமிழீழ விடுதலைப்புலிகள் மனித உரிமைகள் தொடர்பான சட்ட திட்டங்களை மதித்து நடந்து கொள்கின்றனர். இதனை ஐக்கிய நாடுகளின் கிளை நிறுவனங்களும் ஏற்றுக் கொண்டுள்ளன இது எமக்கு திருப்தியை தந்துள்ளது.

இவ்வாறு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிரதிநிதியும், கொழும்புபல் கலைக்கழகத்தின் சட்டத்துறை பீடாதிபதியுமான என்.செல்வகுமாரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் மனித உரிமைகளை பேணுகின்ற நடவடிக்கைகள் சம்பந்தமான பிரச்சினைகள் குறித்து ஆராய்வதற்காக யாழ்ப்பாணம் வந்துள்ள இவர். நேற்று முற்பகல் இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ். அலுவலகத்தில் நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அரசு- புலிகளுக்கிடையான யுத்த நிறுத்த ஒப்பந்தத்திற்கு முன்னர் யாழ். குடாநாட்டில் இராணுவ, பொலிஸ் சம்பந்தப்பட்ட ஏராளமான மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கள், முறைப்பாடுகள் என்பன மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு கிடைத்தன.

எனினும் யுத்த நிறுத்த ஒப்பந்தத்திற்கு பின்னர் இவை குறைவாகவே காணப்பட்டாலும் பொலிஸாரின் அதிகார துஷ்பிரயோகம் குறித்த முறைப்பாடுகள் எமக்கு தொடர்ந்தும் கிடைத்த வண்ணம் உள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் மக்கள் சம்பந்தப்பட்ட விடயங்களில் பொலிஸாரின் நடவடிக்கைகள் அதிருப்திக்குரியதாகவே உள்ளன. (33)

# பேச்சுக்களை ஆரம்பிக்க சனாதிபதி இன்றைய சூழலைப் பயன்படுத்த வேண்டும்

### யாழ். அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் வலியுறுத்து

தமிழீழ விடுதலைப்புலிகளால் முன் வைக்கப்பட்டுள்ள இடைக்கால தன்னாட்சி அதிகார சபை யோசனை அடிப்படையில் சமாதானப் பேச்சுக்களை நகர்த்துவதற்கு நிபந்தனைகள் அற்ற ஆதரவை தருவதாக ஐக்கிய தேசியக் கட்சி கூறியுள்ள சாதகமான சூழலைப் பயன்படுத்தி சனாதிபதி சமாதானப் பேச்சுக்களை முன்னெடுக்க வேண்டும்.

இவ்வாறு யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தினரால் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் ஸ்திரமற்ற தன்மையால் அரசாங்கம் சமாதானப் பேச்சு வார்த்தைகளைச் சிறப்பாக முன்னெடுக்க முடியாத நிலையில் உள்ளது என்பதை உணர்ந்து ஐக்கிய தேசியக் கட்சி இவ்வாறான ஒரு ஆதரவை வழங்க முன் வந்துள்ளமை நாட்டின் அரசியலில் நல்லதொரு மாற்றத்தைத் தரக்கூடியது. எனவே இதனை ஏற்று அரசு சமாதான பேச்சுக்களை நகர்த்துவதன் மூலம் மீண்டும் ஒரு யுத்தம் ஏற்படக்கூடும் என மக்கள் அஞ்சி வாழ்கின்ற நிலைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படும் எனவும் சுட்டிக் காட்டியுள்ள அறிக்கையில் இராணும் மற்றும் பொலிஸார் மேற் கொள்ளும் உரிமை மீறல்களுக்கு முடிவு கட்ட வேண்டும் எனவும் கோரப்பட்டுள்ளதுடன் யாழ். குடாநாட்டு மக்களது அரசியல் அபிலாசைகள், வாழ்வுரிமைக் கோரிக்கைகள் என்பன குறித்தும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இவ்வாறான இவ் அறிக்கை இலங்கை அரசு மற்றும் வெளிநாட்டுத்தூதரகங்கள் என்பனவற்றிற்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (33)

# சமூகக் கல்விக்குப் பதிலாக புதிய மூன்று பாடங்கள்

(கொழும்பு)

பாடசாலைகளின் பாடவிதானத்தில் சமூகக்கல்விப் பாடத்திற்குப் பதிலாக மூன்று தனித் தனிப் பாடங்கள் அறிமுகப்படுத்தப்படுமென கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.

பூமி சாஸ்திரம், வரலாறு, புவியியல் போன்ற புதிய பாடங்கள் அறிமுகப்படுத்தப்படுமென தெரிவித்துள்ளது.

இப் பாடங்கள் அடுத்த வருடம் தரம் 07இல் இருந்து ஆரம்பிக்கப்படவுள்ளது. இப் பாடங்களை உத்தியோக பூர்வமாக அறிமுகம் செய்யும் வைபவம் கோமாகம மிகொடவில் உள்ள கல்வி வளநிலையத்தில்இன்று காலை இடம்பெறவுள்ளது.

# வரவு- செலவுத் திட்டத்திற்கு உ. வங்கியின் நிதி கிடைக்காது!

### நிதியமைச்சின் சிரேக்ஷட பேச்சாளர்

(கொழும்பு)

எதிர்வரும் நவம்பர் மாதம் 18 ஆம் திகதி சமர்ப்பிக்கும் வரவு செலவு திட்டத்திற்கு உலக வங்கியிடம் இருந்தோ அல்லது சர்வதேச நிதியில் இருந்தோ நிதி கிடைக்காது என நிதி அமைச்சின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு நிதி வழங்கும் நாடுகளினால் தயாரிக்கப்பட்டுள்ள வறுமை ஒழிப்புத்திட்டத்தை மையப்படுத்தி இந்நாட்டின் பொருளாதார அபிவிருத்தியை புதிய அரசாங்கம் மேற்கொள்ளாத படியால் இந்த உதவிகள் நிறுத்தப்படுவதற்கு காரணமாக இருக்கலாமென நிதியமைச்சர் சிரேஷ்ட பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

# இடைக்கால நிர்வாக சபை கோருவது சனநாயக விரோதச் செயலாம்

### ஆனந்தசங்கரி கூறுகின்றார்

(கொழும்பு)

இடைக்கால நிர்வாகம் ஒன்றைக் கோருவது சனநாயகத்திற்கு விரோதமானதென தமிழர் விடுதலைக் கூட்டனியின் முன்னாள் தலைவர் ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார்.

இந் நாட்டினில் இறைமைக்கும் ஒருமைப் பாட்டிற்கும் இது முற்றிலும் முரணானதென சுட்டிக்காட்டியுள்ளார்.

நேற்றுக் காலை மல்வத்த பிடத்தின் பீடாதிபதி சுமங்கல தேரரை சந்தித்த வேளை மேற் கண்டவாறு தெரிவித்துள்ளார். சகல அரசியல் கட்சியும் ஒன்றிணைந்து இனப் பிரச்சனைக்குத் தீர்வு காணவேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

# யாழ்.இல் செயற்படும் அமைப்புக்களின் விபரம் கோருவது ஏற்கமுடியாத செயல்

## படையினர் செயல் குறித்து சட்டத்தரணி விசனம்

யாழப்பாணத்தில் செயற்படும் அமைப்புகள் மற்றும் கட்சிகளில் பணியாற்றுவோரின் தகவல்கள் தொடர்ந்தும் பெறப்பட்டு வருகின்றமையானது போர் நிறுத்த உடன்படிக்கையின் கீழ் ஏற்றுக்கொள்ள முடியாத செயல் என சடடத்தரணி ஒருவர் தெரிவித்துள்ளார். படையினர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய காலத்தில் இருந்தே இந்த முறை கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. இதன்படி அமைப்புக்கள் மற்றும் கட்சிகள் தமது அலுவலகத்தில் பணியாற்றி வரும் உறுப்பினர்களின் தகவல்களை மாதாமாதம் படையினரிடம் சமர்ப்பிக்க வேண்டும் அல்லது படையினர் குறிப்பிட்ட அலுவலகங்களுக்கு சென்று அந்த தகவல்களை பெற்று வருகின்றனர். எனினும் தமிழீழ விடுதலைப்புலிகளின் அலுவலகங்களில் இருந்து இவ்வாறான தகவல்கள் படையினருக்கு வழங்கப்படுவதுமில்லை அதேநேரம் படையினரும் அது தொடர்பாக குறிப்பிட்ட அலுவலகங்களுக்கு செல்வதுமில்லை எனத்தெரிவிக்கப்படுகிறது.(32)

# வர்த்தகத்துறைக்கு உதவி நோர்வே அரசு விருப்பம்

(கொழும்பு)

நோர்வே அரசு இலங்கையின் சிறிய, மற்றும் நடுத்தர அளவிலான வர்த்தகத்துறைகளை முன்னெடுத்துச் செல்வதற்கு உதவி வழங்க விருப்பம் தெரிவித்துள்ளது.

நோர்வேத் தூதரகத்தின் முதலாவது செயலாளர் இது தொடர்பாக தெரிவிக்கையில் இலங்கைக்கான நோர்வே அபிவிருத்தி ஒத்துழைப்பு திட்டத்தின் ஓர் அம்சமாக இவ் உதவி வழங்கப்படுமென தெரிவித்துள்ளார். சிறிய மற்றும் நடுத்தரஅளவிலான வர்த்தகத் துறைகளுக்கான தொடர் பயிற்சி நெறிகளை அவர் அண்மையில் ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

## கற்றாக் சத்திரசிகிச்சை

எதிர்வரும் 06.11.2004 அன்று யாழ்.போதனா மருத்துவமனையில் சேவையாற்றும் கண் சத்திர சிகிச்சை நிபுணர் சிவந்தா அவர்களினால் கண்ணில் தோன்றும் வெண்புரைசிகளான கற்றாக் சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்படவுள்ளது.

இதில் பயன்பெற விரும்புவோர் புதுக்குடியிருப்பிலுள்ள டாக்டர் பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவ மனையின் வெளிநோயாளர் பிரிவுடன் இன்று முதல் வரும் 5 ஆம் திகதி வரை காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 1.00 மணிவரை தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

## இதய நோய்களுக்கான விசேட சிகிச்சை

ஐக்கிய இராச்சியம் (u.k) இல் இருந்து வருகை தரவிருக்கும் இதய நோய்களுக்கான சிகிச்சை நிபுணர் துஸ்யந்தன் ஜேம்ஸ் ஞானப் பிரகாசம் அவர்களினால் இதயநோய்களால் பாதிப்புற்றவர்களிற்கும் குறிப்பாக இளம் வயதில் அல்லது குழந்தைப் பராயத்தில் இதயநோய்த் தாக்கத்திற்குள்ளானவர்களிற்கும் விசேட கருவிகள் மூலம் பரிசோதிக்கப் பட்டு மருத்துவ ஆலோசனைகளும் சிகிச்சைகளும் வழங்கப்படவுள்ளன.

இதில் பயன் பெற விரும்புவோர் நாளை 2ஆம் திகதி முதல் 4ஆம் திகதி வரை காலை 8.00 மணி முதல் பிற்பகல் 1.00மணிவரை கிளிநொச்சியிலுள்ள டாக்டர் பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவமனைக்கும் 5ஆம் திகதியும் அடுத்த நாளான 6ஆம் திகதியும் காலை 8.00மணிமுதல் பிற்பகல் 1.00மணிவரை புதுக்குடியிருப்பிலுள்ள டாக்டர் பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவமனைக்கும் சமூகம் தருமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். முன்னர் பதிவு செய்தவர்களும் இதே நாட்களில் சமுகம தரக் கோரப்படுகின்றனர்.

### ஐரோ...

கும் பிரச்சினைகள், யுத்தத்தால் சேத மாக்கப்பட்ட கட்டடங்களுக்கான கொடுப்பனவுகள் வழங்கப்படாமை, கடற்றொழிலாளர் மற்றும் விவசாயக் குடும்பங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், இயல்பு வாழ்க்கை தோற்றுவிக்கப் படாமை, சமாதான முயற்சிகளின் நிலைமை உட்பட மக்கள் எதிர்நோக்கும் பலதரப்பட்ட பிரச்சினைகள் தொடர்பாக இணையப் பிரதி நிதிகள் எடுத்து விளக்கினர். இதையடுத்து ஐரோப்பிய அதிகாரி, அரச மற்றும் அரசசார்பற்ற அமைப்புக்கள் பலவற்றின் பிரதிநிதிகளையும் சந்தித்து இங்குள்ள நிலைமைகளைக் கேட்டறிந்தார். (32)

### மயிலிட்டி..

வழமை போல மயிலிட்டி கடற்பரப்பில் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்த வல்வெட்டித்துறை ஆதிகோவிலடியைச் சேர்ந்த இவ் ஏழுகடற்றொழிலாளர்களையும் கடற்பரப்பில் வைத்து வழிமறித்த சிறிலங்கா கடற்படையினர் காரணம் எதுவும் இன்றி அவர்களைத் தாக்கியிருப்பதாக தெரியவருகிறது.

இவ்வாறு தாக்குதலுக்கு இலக்கான ஏழு கடற் தொழிலாளர்களும் கடற்படையினரது இச்செயலுக்கு எதிராக வடமராட்சி கடற்றொழிலாளர் சங்கத்தில் முறையிட்டுள்ளனர். (33)

### இரு...

பள்ளிவாசல் சேதமாக்கப்பட்டு தீக்கிரையாக்கப்பட்ட போதிலும் தீ பரவாமல் தடுக்கப்பட்டது.

அகில இலங்கை இஸ்லாமிய மெஞ்ஞான பேரவையின் 2 மத்ரசாக்கள் முற்றாகத் தீப்பற்றி எரிந்துள்ளனஇந்த சம்பவத்தையடுத்து அப் பிரதேசத்தில் உருவாகியுள்ளபதற்ற நிலை காரணமாக அனைத்து பள்ளிவாசல்களுக்கும் விசேட பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

கலகம் அடக்கும் பொலிசார் அப் பிரதேசத்தில் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதோடு, இராணுவத்தினரும் பாதுகாப்பு நடவடிக்கையில் இணைக்கப்பட்டுள்ளார்கள்.

இன்று இடம் பெற்ற இந்த வன்முறைச் சம்பவங்களின் போது கத்திக் குத்து மற்றும் வாள் வெட்டு உட்பட தாக்கதலுக்கு இலக்கான 14 வயது சிறுவன் உட்பட 5 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள். சேதமாக்கப்பட்டு தீ வைக்கப்பட்ட பள்ளிவாசல் (கபுறுஸ்தானம்) மருதமுனையைச் சேர்ந்த பயில்வான் என்பவரினால் அமைக்கப்பட்டு வருகின்றது. அங்கு அவரை அடக்கம் செய்வதற்காக கபுறு (கல்லறை) ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. கட்டடத்திற்கு தீ வைக்கப்பட்ட போதிலும் அது ஏனைய இடங்களுக்கு பரவ விடாமல் அணைக்கப்பட்டு விட்டது. இருப்பினும் கட்டடம் பலத்த சேதமாக்கப்பட்டுள்ளது. தீ வைக்கப்பட்டுள்ள இரண்டு மதரசாக்களும் அப்துல் ரவூப் மௌலவியை தலைமையாகக் கொண்ட அகில இலங்கை இஸ்லாமிய மெய்ஞானப் பேரவைக்கு உரியது. இதனைத்தவிர முன்னாள் ஊர்காவல் படை வீரர் பதுார் எனப்படும் ஏ.எம்.பதுர்தீன் என்பவருக்கு சொந்தமான ஹலமிசாவும் சேதமாக்கப்பட்டுள்ளது. தற்போது காத்தான்குடி பிரதேசத்தில் அமைதி நிலவுகின்றது.நேற்றிரவு பொலிஸ் ஏற்பாட்டில் சமாதானக் கூட்டமொன்றும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

### சனாதிபதி...

ஏகமனதாக சனாதிபதி பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டிருப்பார் எனவும் அவ்வாறு நிகழ்ந்திருப்பின் புலிகளுக்கு தனியான நிர்வாகம் ஒன்றை வழங்குவதை எவராலும் தடுத்திருக்க முடியாதென மக்களுக்கு தெளிவாக எடுத்துக் கூறுவது தனது உரையின் நோக்கமாக அமைந்தது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# சனாதிபதியின் சதிச்செயலுக்கு முஸ்.காங்கிரஸ் ஆதரவு வழங்காது

## முஸ்.காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம்

சனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க தனது பதவியையும், ஆட்சியையும் நீடிப்பதற்காககையாளும் எந்தவொரு சதி நடவடிக்கைகளுக்கும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவு வழங்கமாட்டாதென அக் கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம் நேற்று தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தை அரசியல் நிர்ணய சபையாக மாற்றி சிறுபான்மை இன மக்களுக்கு இருக்கும் அரசியல் அந்தஸ்தை முழுமையாக இல்லாமல் செய்து பலவீனப்படுத்த தயாராகி வருகின்றார். அதற்கான அடித்தளம் தான் எமது கட்சியைச் சேர்ந்த 3 பாராளுமன்ற உறுப்பினர்களை பின் கதவால் இழுத்து எடுத்துள்ளார்.அவருடைய இந்த நாடகத்திற்கும், அதன் நடிகர்களுக்கும் முஸ்லிம் மக்கள் காலம் வரும் போது தகுந்த பாடம் புகட்டுவார்கள்.இதற்கு முன்னோடியாக விரைவில் போராட்டங்களையும் முன்னெடுப்பார்கள் என்றும் ரவூப் ஹக்கீம் இது பற்றி மேலும் தெரிவித்துள்ளார்.

# த.க.சபைத்திட்டத்திற்கெதிராக கொழும்பில் மாநாடு

தமிழிழ விடுதலைப்புலிகளின் இடைக்கால தன்னாட்சி அதிகார சபைத் திட்டமானது நாட்டை பிளவுப்படுத்தும் என்ற கருத்தை முன்வைத்து எதிர்வரும் டிசம்பர் முதலாம் திகதி கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் மாநாடு ஒன்று நடத்தப்படவுள்ளது.இலங்கையின் சமாதானத்துக்கான சர்வதேச அமைப்பு இதனை ஏற்பாடு செய்துள்ளது.

# ஈராக்கில் கடத்தப்பட்டவரை மீட்க அனைத்து முயற்சிகளும் எடுக்கப்படும்!

*–அமைச்சர் பேராசிரியர் விஸ்வவர்ணபால*

ஈராக்கில் தீவிரவாதிகளினால் கடத்தப்பட்ட இலங்கையரான தினேஸ் தர்மேந்திரா இராஜரத்தினத்தை விடுவிப்பதற்கான அனைத்து முயற்சிகளையும் தமது அமைச்சு மேற்கொண்டு வருவதாக பிரதி வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் விஸ்வவர்ணபால தெரிவித்துள்ளார்.

குறிப்பிட்ட நபர் தனது சுய விருப்பத்தின் பேரில் குவைத்திலிருந்து ஈராக்கிற்கு அனுப்பப்பட்டாரா அல்லது தொழில் நிறுவனத்தின் கட்டாயத்தின் பேரில் அனுப்பி வைக்கப்பட்டாரா, என்பன குறித்து தற்போது ஆராயப்பட்டு வருவதாகவும், அவர் தெரிவித்துள்ளார். இவரை இராஜதந்திர ரீதியில் அல்லது மாற்று வழிகளில் என்றாலும் சரி விடுவிப்பதற்கான முயற்சிகளில் மத்திய கிழக்கிலுள்ள ஏனைய சிறிலங்கா இராஜதந்திரிகள் ஊடாக முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# அரசாங்கத்தின் மாற்றுயோசனைகள் சனவரியில் புலிகளிடம் வழங்கப்படும்

தமிழிழ விடுதலைப்புலிகளின் இடைக்கால தன்னாட்சி யோசனைக்கு மாறாக அரசாங்கம் தயாரித்துள்ள யோசனை எதிர்வரும் ஜனவரி மாதமே தமிழீழ விடுதலைப்புலிகளிடம் சமர்ப்பிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்சமயம் சனாதிபதியின் பார்வைக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள இந்த யோசனை, அரசியமைப்பு சம்பந்தமான 12 பேரடங்கிய குழு ஒன்றிடம் சமர்ப்பிக்கப்பட்டு இறுதி ஆராய்வு இடம்பெறவுள்ளது.இதன் பின்னரே இது தமிழீழ விடுதலைப் புலிகளிடம் சமர்ப்பிக்கப்படவுள்ளது. இதேவேளை இனபபிரச்சினைதீர்வுக்கான அரசியலமைப்பு திருத்தத்தில் சிறுபான்மையை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் உப சனாதிபதி ஒருவர் நியமிக்கப்படவேண்டும் என ஈழ மக்கள் ஜனநாயக கட்சியான ஈ.பி.டி.பி தெரிவித்துள்ளது இது தொடர்பான யோசனை ஒன்றை அந்தக்கட்சி சனாதிபதியின் சமாதானத்துக்கான தேசிய ஆலோசனை சபையில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக கட்சி தரப்புத் தெரிவித்துள்ளது

# மாவீரர் நாளை முன்னிட்டு மல்லாவியில் கலந்துரையாடல்

(மல்லாவி)

எதிர்வரும் மாவீரர் நாளை முன்னிட்டு மல்லாவி வர்த்தக சங்கத்தினருக்கான கலந்துரையாடல் நிகழ்வு கடந்த வெள்ளிக் கிழமை யோகபுரம் மகாவித்தியாலய மண்டபத்தில் வர்த்தக சங்கத் தலைவர் தி.தர்மலிங்கம் தலைமையில் இடம் பெற்றது.

இந் நிகழ்வில் மாவீரர் நாள் நிகழ்வினை மிகவும் சிறப்புடன் நினைவு கூரும் முகமாகவும் அன்றைய காலப்பகுதியில் வீதிகளில் உள்ள முக்கிய சந்திகளில் வளைவுகள், மாவீரர்களின் தியாகங்களை சித்தரிக்கின்ற பாதைகள், சிவப்பு மஞ்சள் கொடிகளினால் அலங்கரித்தல் சிரமதானங்கள் போன்ற வேலைத்திட்டங்களை மேற்கொள்ளுவது பற்றி ஆராயப்பட்டது. இக்கருத்துக்களை பாண்டியன்குளம் துணுக்காய் தமிழர் புனர் வாழ்வுக்கழக வலயப்பணிப்பாளர் மு.மூர்த்தி, துணுக்காய் பிரதேச அரசியல்துறைப்பொறுப்பாளர் செ.புனிதன் ஆகியோர் நிகழ்த்தினர். நிகழ்வில் வர்த்தக சங்கத்தினர், நலன்விரும்பிகள் போராளிகள் பலரும் கலந்து கொண்டனர். (24)

### இந்திய...

வழங்க சிறிலங்கா அரசு முடிவு செய்துள்ளது.

இந்தியத்தளபதி முக்கிய படை முகாம்களுக்கும் விஜயம் செய்து நிலமைகளை நேரில் அறிந்து கொள்ளவுள்ளார்.

அத்துடன் இலங்கை-இந்திய பாதுகாப்பு ஒத்துழைப்பு உடன்பாடு குறித்து இலங்கை அரசாங்க அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தைகளையும் நடத்த எண்ணியுள்ளார்.

கடந்த சில வாரங்களுக்கு முன்னர் இந்தியக்கடற்படைத் தளபதி சிறிலங்காவிற்கு விஜயம் செய்திருந்தது தெரிந்ததே.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 01 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.